Registered as a News Paper    பக்கங்கள் 08    விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்:- 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    வைகாசி 30    (12 - 06 - 1992)    வெள்ளிக்கிழமை    ஓசை: 115

## க. பொ. த (உ/த) பரீட்சை ஆகஸ்ட் முதலாம் திகதி

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை வரும் ஆகஸ்ட் மாதம் 1ஆம்திகதி ஆரம்பமாகும் என பரீட்சை திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் பரீட்சை 25 ஆம் திகதி வரை நடைபெறும் என்றும் ஒரு இலட்சத்து அறுபதினாயிரம் பேர் வரையான பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர் என்றும், இவர்களுக்கான பரீட் (8ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் - இராணுவம் பகல் முழுவதும்

# வலி - வடக்கில் கடும் சண்டை; 20 படை பலி; பலர் படுகாயம்

### கண்ணியில் சிக்கி கவசவாகனம் நாசம்

(நமது நிருபர்)

வலிகாமம் வடக்கில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் இடையில் நேற்று பகல் முழுவதும் உக்கிர மோதல் இடம்பெற்றது. தச்சன்காடு, தெல்லிப்பழை, மாவிட்டபுரம், கீரிமலை பகுதிகளில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அம்பனை, கருகம்பனை, சேந்தான்குளம் பகுதிகளை நோக்கி நான்கு முனைகளில் முன்னேற முயன்றபோதே இம்மோதல் ஏற்பட்டது. இம்மோதலில், 20 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். கவச வாகனமொன்று முற்றாகச் சேதமடைந்தது.

புலிகள் தரப்பில் மூவர் வீரச்சாவு அடைந்தனர்.

நேற்று அதிகாலை 5.30மணியளவில் விமானப் படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள், இரு உலங்கு வானூர்திகள். ஒரு அவ்ரோ விமானம் என்பன வலிவடக்கில் பாரிய குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தின காலையில் இருந்து இடைவிடாது மாலை வரை தாக்குதல் நடைபெற்றது. இதே வேளை, மாதகல் கடற்பரப்பில் தரித்து நின்ற பீரங்கிப் படகுகளில் இருந்து இடைவிடாது கரையோரப் பகுதிகள் நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதேவேளைதெல்லிப்பழை, மாவிட்டபுரம், தச்சன்காடு, கீரிமலைப் பகுதியில் நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் அம்பனை, கருகம்பனை, சேந்தான்குளம் பகுதிகளை நோக்கி நான்கு முனைகளில் தாக்குதலைத் தொடுத்தனர். இத்தாக்குதல்களில் 2,500க்கு மேற்பட்ட இராணுவத்தின (8ஆம் பக்கம் பார்க்க)

### 3 வேங்கைகள் வீரச்சாவு

வலி - வடக்கு பகுதியில் நேற்று நான்கு முனைகளினூடாக முன்னேற முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே 13 மணி நேரமாக இடைவிடாத மோதல்கள் இடம் பெற்றன. இம்மோதல்களில் 20 இராணுவத்தினர் பலியாகியதுடன் ஒரு கவச வாகனம்முற்றாக சேதமடைந்தது.

இம்மோதல்களில் மூன்று (8ஆம் பக்கம் பார்க்க)

### இனப்பிரச்சினையில் இந்தியாவின் துரோகம்

(பரிஸ்)

''இந்தியா தொடுத்த இராணுவ ரீதியான போரை தமிழ் மக்கள் எவ்வாறு முறியடித்தார்களோ அதே போன்று ராஜதந்திர ரீதியான இந்தப் போரையும்முறியடிப்பார்கள். இன்னொரு படையெடுப்புக்கும் தயாராகவே விடுதலைப் புலிகள் உள்ளனர்''

இவ்வாறு பிரான்சில் உள்ள தமிழர் ஒருங்கிணைப்புக் குழு விடுத்துள்ள அறிக்கையில்தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

தேசிய இனப்பிரச்சினையில் (8ஆம் பக்கம் பார்க்க)

### ஆயிரக்கணக்கான மக்கள் இடம் பெயர்வு

சிறிலங்காவின் முப்படைகளும் நேற்று முழுவதும் நடாத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களினால் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தமது வாழ்விடங்களை விட்டு வெளியேறி ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

இளவாலை, மாரீசன்கூடல், கருகம்பனை, அளவெட்டி, முள்ளானை, மாதகல் பகுதிகளிலிருந்து வெளியேறியமக்கள் பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, தொட்டிலடி பகுதிகளிலுள்ள பாடசாலைகள், ஆலயங்கள் உறவினர் வீடுகளில் தஞ்சமடைந்துள்ளனர்.

### அவசர உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் வெளியேறும் மக்களுக்கான அவசர உணவு விநியோகம் வான் தாக்குதல்களால் சீர்குலைந்துள்ளது.

எனவே இவ்விநியோகங் (8ஆம் பக்கம் பார்க்க)

# விமானப் படையின் அனர்த்தம் ஐவர் பலி: 50 மேற்பட்டோர் படுகாயம்

### நூற்றுக்கணக்கில் வீடுகள் நாசம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் பொதுமக்களின் இலக்குகளின் மீது சிறிலங்கா விமானப்படையினர் நடத்திய குண்டுத்தாக்குதலில் ஐந்து அப்பாவிப் பொதுமக்கள் கோரமாக கொல்லப்பட்டிருக்கின்றனர். ஐம்பதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். நூற்றுக்கும் மேற்பட்ட வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

நேற்று அதிகாலை 5.45 மணிமுதல் இவ் அகோர வான் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. மூன்று குண்டு வீச்சு விமானங்கள், அவ்ரோ விமானம் ஒன்று, இரு உலங்கு வானூர்திகள் ஆகியவை இணைந்து இத்தாக்குதல்களை நடத்தின.

மாதகல், மாரிசங்கூடல் மல்லாகம், சுன்னாகம், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மானிப்பாய், அளவெட்டி, இளவாலை போன்ற பல்வேறு பகுதிகளிலும் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன அதேவேளை மாவிட்டபுரம், பலாலி ஆகிய பகுதிகளில் இருந்து பொதுமக்களின் குடியிருப்புக்களை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

காலை 6.00 மணியளவில் வட்டுக்கோட்டைப் பகுதிக்கு விரைந்து வந்த இரு குண்டு வீச்சு விமானங்கள் புளியடி என்ற பகுதியில் நடாத்திய பட்ட குண்டுவீச்சினால் ஐந்து பொது மக்கள் காயமடைந்திருக்கின்றனர். இத்தாக்குதலையடுத்து சுழிபுரம் தபால் அலுவலகத்துக்கு அண்மையில் குண்டு வீச்சு நடாத்தப்பட்டது. இத்தாக்குதலினால் ஐந்து பேர் காயமடைந்ததுடன் ஐந்து வீடுகளும் முற்றாகச் சேதமடைந்தன.

(8ஆம் பக்கம் பார்க்க)

### பலியானோர் காயமடைந்தோர் விபரம்

வட்டுக்கோட்டைப் பகுதியில் நடாத்தப்பட்ட விமானக் குண்டுவீச்சில் படுகாயமடைந்தோர் க. கனகசபை (89) வட்டுக்கோட்டை, ஆ. யுகசொரூபி (41) வட்டுக்கோட்டை, தேவராணி (30) காரைநகர், கோமளவல்லி (58) காரைநகர், சிவசுப்பிரமணியம் (காரைநகர்) இத்தாக்குதல்களினால் அப்பகுதியில் நான்கு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

#### மாதகலில்

மாதகல் பகுதியில் காலையும் மாலையும் நடாத்தப்பட்ட குண்டுவீச்சு, கலிபர் மற்றும் றொக்கற் தாக்குதல்களினால் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார். மூவர் படுகாயமடைந்தனர்.

இதில் றொபின்சன் (வயது 12) பலியானார். வேவி (60) மத்தியூஸ் (49) கிருஷ்ணசாமி (52) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

#### இளவாலையில்

இளவாலைப் பகுதியில் காலை முதல் மாலை வரை நடாத்தப்பட்ட அகோரவிமானக் குண்டு வீச்சுகளினாலும் எறிகணைத் தாக்குதல்களினாலும் கடற்படைப் பீரங் (8 ஆம் பக்கம் பார்க்க)

### மானிப்பாயில் கிரனைட் வீச்சு

#### வைத்தியசாலை முன்பாக ஏழுபேர் காயம்

[யாழ்ப்பாணம்]

நேற்று காலை 10.30 மணியளவில் சிறிலங்காவின் விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்று மானிப்பாய். சோண்டாவில் ஆகிய பகுதிகளை வட்டமிட்டு கிரனைட், மற்றும் 50 கலிபர்த் தாக்குதலை மேற்கொண்டது. இதில் மானிப்பாய் ஆஸ்பத்திரி முன்பாக நடாத்தப்பட்ட கிரனைட் வீச்சில் 10 பேர் வரை காயமடைந்தனர் சோண்டாவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கிரனைட்வீச்சில் இரு வீடுகள் சேதமடைந்தன.

மானிப்பாய் ஆஸ்பத்திரி முன்பாக மேற்கொள்ளப்பட்ட (8 ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## சங்கீதம்

சங்கீதம்வினாவிடை கிடைக்குமிடங்கள்: பூபாலசிங்கம், திணேஷ், பால ஜி மண்டேலா, மாக்மிலன், ஞானசுரபி, ஆல்சிலோன், சோபிதா, அறிவாலயம், பிரசாந்தி, வாலாம்பிகா, ஸ்ரீலங்கா, சுப்பிரமணியம், ஸ்ரீகாந்த், ஸ்ரீசாந்தா, நடுவுத்துருத்தி. (2648)

## அன்பை நினைவூட்ட

உங்கள் நினைவுகளை அன்பர்களின் 'ஆட்டோகிராப்' பில் பதிக்க அழகிய பொன்மொழிகள் வேண்டுமா? இதோ ''பொறுக்கிய முத்துக்கள்'' பொன்மொழித் தொகுப்பு. தொகுப்பாசிரியர் 'கோப்பாய்—சிவம்' விலை ரூபா பத்து. எல்லாப் புத்தகக் கடைகளிலும் கிடைக்கும். (2659)

## உலகத் தமிழர் பண்பாட்டுமாநாடு

(சிட்னி)

ஐந்தாவது உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாடுவரும் ஒக்டோபர் 3 ஆம் திகதி முதல் 5 ஆம் திகதிவரை அவுஸ்திரேலியாவில் சிட்னி பல்கலைக்கழகத்தில்நடை பெறவுள்ளது.

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி

தமிழ், ஆங்கிலம் தட்டெழுத்து, சுருக்கெழுத்து

### பயிற்சி நெறி

1. மேற்படி பயிற்சிநெறியில விரும்புவோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி இலவசமாக நடைபெறவுள்ளது ஆர்வமுடையோர் தமது ஆற்றல், கல்வித்தகைமை ஆகியவற்றை உறுதிப்படுத்தும் அத்தாட்சிப்பத்திரங்களுடன் 01.07 1992 புதன்கிழமை மாலை 2.00 மணிகு எமது பணிமனையில் நடைபெறவிருக்கும் நேர்முகப்பரீட்சைக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

2. மேற்படி பயிற்சி நடாத்துவதற்கான போதனாசிரியர் ஒருவர் தேவைப்படுவதால் அப்பதவிக்கும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

I தகைமை;-
தமிழ் ஆங்கிலம் தட்டெழுத்து சுருக்கெழுத்தில் கற்பிக்கும் தேர்ச்சி பெற்றவர்.

II. வயது;-20-45 வரை

III. வேதனம்: கலந்தாலோசித்து தீர்மானிக்கப்படும்.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சையும் 01 07 1992 புதன் கிழமை மாலை 2.00 மணிக்கு நடைபெறும், தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

பொ.வினாயகமூர்த்தி
கௌரவசெயலாளர்
இல 396 கண்டிவீதி,
கிளிநொச்சி,
09.06.1992.

# நினைவு கூருகின்றோம்... 1992-06-12

1985-ம் ஆண்டு இதே தினத்தில் இக்கினியாகலையில், அம்பாறைப் பகுதி காவல்துறையினரால் படுகொலை செய்யப்பட்ட 05 தமிழர்கள்.

1986 ம் ஆண்டு மன்னார் - மாந்தைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சவெய்திய -

லெப் அருச்சுனா (சதாசிவம் தமிழ்ச்சுவரன் - இல: 46 புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம் -)

திருக்கோணமலை / மூதூர், மகிந்தபுரம் பகுதியில் சிறிலங்கா ஊர்காவல்படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ முரளி (கணபதிப்பிள்ளை கிருஸ்ணபிள்ளை ஈச்சலம்பத்தை மூதூர், திருக்கோணமலை,)

இதே பகுதியில், சிறிலங்கா ஊர்காவல்படையினரால் வெட்டிக்கொல்லப்பட்ட 19 - தமிழர்கள்.

1987-ம் ஆண்டு வீரச்சாவெய்திய -

★ தருமன் (தாமோதரம் தங்கராசா - ஈச்சிலம்பத்தை, மூதூர், திருக்கோணமலை -)

திருக்கோணமலை - தம்பலகம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட 6 - தமிழ் விவசாயிகள்.

தமிழீழக்கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 - தமிழர்கள்.

1988-ம் ஆண்டு வவுனிக்குளத்தில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது தனது கைக்குண்டை வெடிக்க வைத்து வீரச்சாவெய்திய -

லெப் அத்தார் யசோதரன் (தர்மலிங்கம் யசோதரன் - கற்குளம் நெடுங்கேணி, மணலாறு -)

1989-ம் ஆண்டு வவுனியாவில் தேசவிரோத சக்திகளினால் கடத்திச் செல்லப்பட்டு கிண்ணக்குளம் பகுதியில் வைத்து சித்திரவதை செய்யப்பட்டுக்கொலை செய்யப்பட்ட -

★ முல்லைத்தீவு பிராந்திய பொதுக்குழு உறுப்பினர் - மாமா (வேலாயுதம், நாகரத்தினம் கள்ளப்பாடு, முல்லைத்தீவு -)

★ சாம் (இராமச்சந்திரன்-காத்தார்குளம் மன்னார்)

★ குணபால் (பெரியகுளம், கனகராஜன்குளம், வவுனியா-)

★ ஐயா/ அர்ச்சுனன் (ச. விக்னேஸ்வரன் இல 26, வீட்டுத்திட்டம் புளியங்குளம், வவுனியா)

★ செல்வம் (நா.சிவபாலன் - இரணை இலுப்பைக்குளம், வவுனியா -)

★ வன்னி (நாகலிங்கம் - கல்மடு, இரணை இலுப்பைக்குளம், வவுனியா -)

இதே ஆண்டு தேசவிரோத சக்திகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட விழிசிட்டியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1990-ம் ஆண்டு மட்டக்களப்பு சவுக்கடி/சவுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

மேஜர் நேசன் (பஞ்சாட்சரம் அரசடி வீதி, அக்கரைப்பற்று, அம்பாறை)

ஜெகதீசன் (சாலோகநாதன் அரசடித்தீவு கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

மகிழன் / முகிலன் (சண்முகநாதன் யோகநாதன் கோயில் போரதீவு மட்டக்களப்பு)

வின்சன் (கல்முனை, அம்பாறை)

திலீபன் (புல்லுமலை, மட்டக்களப்பு)

மிலேந்திரன் (கந்தசாமி தயாகரன் வெல்லாவெளி மட்டக்களப்பு)

ஜெகநேசன் (கிருஸ்ணபிள்ளை சேதுராசா அலியார்வெட்டை, மட்டக்களப்பு)

றொமி (கல்லடி, மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கும்புறுமூலைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -)

கப்டன் கோடீஸ்வரன் (குமாரசாமி சிவமூர்த்தி கிரான், மட்டக்களப்பு)

கப்டன வாமன் (வேல்முருகு யோகராசா சந்திவெளி, மட்டக்களப்பு)

லெப், ஜெமீல் (முஸ்த்தபா ஓட்டமாவடி, மட்டக்களப்பு)

குயிலி (சகாதேவன் தங்கவடிவேல் இலுப்பையடிச்சேனை, மட்டக்களப்பு)

கடாபி (நல்லையா சுதேசன் - வந்தாறுமூலை, மட்டக்களப்பு)

நேரு (நவரத்தினையா சுவேந்திரன் கொடுவாமடு, மட்டக்களப்பு

பிரபா (வேலாயுதம் கண்ணதாசன் கிரான், மட்டக்களப்பு)

ஜனகன் (தம்பிஐயா ஜெகநாதன் கிரான் மட்டக்களப்பு)

பீற்றர் (பூபாலபிள்ளை சந்திரகாந் ஒலுவில், மட்டக்களப்பு)

பழனி (இராசா அற்புதராசா - முறக்கொட்டாஞ்சேனை, மட்டக்களப்பு)

றாஜா (சிவநேசன் மயிலம்பாவெளி, மட்டக்களப்பு)

தௌபீக் (இஸ்மாயில் ஓட்டமாவடி, மட்டக்களப்பு)

துரை (பெரியதம்பி வடிவேல் காயன்குடா, கொடுவாமடு, மட்டக்களப்பு)

றுசியன் (தம்பிராசா புலேந்திரன் - முதலைக்குடா, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு)

அம்பாறை கல்முனை பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான மோதலில் வீரச்சாவெய்திய -

ஜெயராஜ் (கல்முனை, அம்பாறை)

மட்டக்களப்பு கல்துடாப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

சிவா (சதாசிவம் நகுலன் வாழைச்சேனை, மட்டக்களப்பு)

சசிக்குமார் (வாழைச்சேனை, மட்டக்களப்பு)

மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

ஜெசி (இம்மானுவேல் குறோசியஸ் நெடுங்கேணி வீதி, ஒட்டிசுட்டான், முல்லைத்தீவு)

அம்பாறையில், சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் முஸ்லீம் காடையர்களினால் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள் சிறுவன். இளம்பெண் உட்பட 6-தமிழர்கள சிறிலங்கா இராணுவத்தினரின் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட குழந்தைகள் மாணவர்கள் இளம் பெண் மற்றும் பெண்கள் உட்பட கல்முனை வாசிகளான 12 தமிழர்கள்: கல்முனைப்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் போது கொல்லப்பட்ட 7 வயதுச்சிறுமி உட்பட 4- தமிழர்கள்.

மட்டக்களப்பு கார்மேல் திருக்குடும்ப கன்னியர் மடத்தின் மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட கன்னியாஸ்திரிகள், மாணவிகள் உட்பட 7- தமிழர்கள்; வவுனியாவுக்கு வேலைக்குச் சென்றபோது காணாமல் போன மட்டக்களப்பு புன்னைச்சோலை, குமரபுரத்தைச் சேர்ந்த தமிழ் பொதுமகன்.

வெலிகந்தைபுகையிரதநிலையக்கடவையில்வைத்து காணாமல்போன மட்டக்களப்பு புகையிரதநிலைய விடுதிவாசியான தமிழ் இளைஞன்.

1991-ம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவததினர் மேற்கொண்ட நடவடிக்கைகளில் கொல்லப்பட்ட கோப்பாவெளியைச் சேர்ந்த 2- தமிழர்கள் கொக்கட்டிச்சோலை, மகிழடித்தீவு முதலைக்குடா பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினரால் குத்தியும் வெட்டியும், சுட்டும், அடித்தும கொல்லப்பட்ட குழந்தைகள், பெண்கள், வயயோதிபர்கள் உட்பட 225-க்கும் மேற்பட்ட தமிழர்கள் மற்றும் இதே சம்பவத்தின் போது காணாமல் போன குழந்தைகள், சிறுவர்கள் இளம்பெண்கள், இளைஞர்கள் உடபட 56 - தமிழர்கள் பெரியபுல்லுமலைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டு எரிக்கப்பட்ட அதே இடத்தைச்சேர்ந்த இளம் பெண்.

## ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4536)


## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு
சனி, ஞாயிறு தினங்களில்
மாலை 4.00, 6.00 மணி
காட்சிகளாகக் காண்பிக்கப்படுகின்றது.

VIPER

(வஞ்சக தன்மையுடைய ஒருவன்)

(சி/4509)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி

### எழுதுவினைஞர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் கணனியில் அனுபவமும், தேர்ச்சியும், ஆற்றலும் உள்ளவர்களிடமிருந்து 25. 06. 1992 ற்கு முன்னதாகக் கோரப்படுகின்றது.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 01 07- 1992 புதன்கிழமை காலை 10 00 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

இல, 396, கண்டி வீதி,
கிளிநொச்சி
09. 06 1992

பொ வினாயகமூர்த்தி
கௌரவசெயலாளர்

யாழ்ப்பாணம்






போராட்டம்...

இந்தச் சொல்லுக்குள்தான் எத்தனை விதமான உணர்ச்சி அலைகள் அடங்கி இருக்கின்றன.

குடும்பம் என்ற சிறிய பரப்புக்குள் சில மனிதர்கள், சில உணர்வுகள் என்று வாழ்ந்த நாம் 'விடுதலை இயக்கம்' என்ற விரிந்த பரப்புக்குள் வந்ததால், எத்தனை எத்தனை உள்ளங்களை, சந்தோஷங்களை, பிரிவுத் துயரங்களை வாழ்வின் உண்மைகளைக் கண்டு கொண்டிருக்கிறோம்.

எமது போராட்ட வாழ்வில் உன்னதமான உள்ளங்களோடு பழகும்போது சந்தோஷப்படும் நாங்கள், பிரிவு என்று வருகின்றபோது அதிகமாகத் தாக்கப்படுவதென்னவோ உண்மைதான். கப்டன் அக்கினோவின் உள்ளம்கூட அந்த உன்னதமான உள்ளங்களில் ஒன்றுதான்.

மிகவும் வசதியான குடும்பம். வாழ்வில் பொருளாதாரக் கஷ்டங்களையோ, துன்பங்களையோ கண்டிராத செல்வந்தமான குடும்பச் சூழலின் கடைசிப்பிள்ளைதான் அக்கினோ.

'நீங்கள் செல்லமாக வளர்ந்தனாங்கள், போராட்டக் கஷ்டங்களை எங்களால தாங்க ஏலாது'

என்று சொல்கின்றவர்களுக்கு அக்கினோ வாழ்ந்து காட்டியிருக்கின்றாள். விடுதலை உணர்வுக்கு முன்னால் வேறெந்தப் புற உலக உணர்வுகளும் தாக்குப் பிடிக்க முடியாது என நிரூபித்திருக்கின்றாள். ஏனென்றால் ?

அக்கினோவும் ஒரு செல்லப் பிள்ளைதான். பாடசாலை நாட்களில் அக்கினோவைக் கண்டவர்கள், பழகியவர்கள் அக்கினோவைப் பற்றிக்கூறும் தகவல்கள்,

'இவள் எப்படி இந்த வாழ்வை ஏற்றுக் கொண்டாள்?' என ஆச்சரியப்பட வைக்கும்.

அக்கினோவின் எடுப்பான தோற்றம் அவளைப் பற்றிய பார்வையில் ஒரு தவறான கணிப்பைக் கொடுத்திருக்கலாம். ஏன்? நாம் கூட,

'இவள் எப்படி எல்லாப் போராளிகளோடும் ஏற்றத் தாழ்வின்றிப் பழகப் போகிறாள்?' என நினைத்ததுண்டு. ஆனால் பழகிய போது புரிந்தது. அவள் இதயத்தில் ஏற்றத் தாழ்வுக்கு இடமில்லை என்பது.

அக்கினோவின் அப்பா தமிழீழத்தின் நேதாஜி மாமனிதர். தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் காலத்தில் எங்கள் தலைவனின் கைகளுக்கு இறுக்கமாக வலுவூட்டியவர்.

உண்மைதான் இப்படி ஒரு தந்தைக்குப் பிறந்த குழந்தைகள் எப்படி எங்கள் மண்ணை நேசிக்காமல் இருக்க முடியும்? அக்கினோவின் அப்பா மட்டுமல்ல அவளது அக்காகூட எங்கள் அமைப்பில்தான் இருக்கின்றாள்.

தமிழீழம் தனது தலைசிறந்த பெண் போராளிகளில் ஒருத்தியை இழந்து விட்டது. நாங்கள் ஓர் உயர்ந்த, உன்னதமான தோழியை இழந்துவிட்டோம். அந்தத் தோழியின் வீடோ அமைதியைப் பெற்றெடுத்து விட்டது. அந்த வீட்டின் படிகள் அநேகமான நாட்களில் சிங்கள, இந்திய சப்பாத்துக் கால்களையும், துப்பாக்கிக் காவல்களையுமே சந்தித்திருக்கின்றன.

அப்பாவின் தலைமறைவு வாழ்க்கைக் காலத்திலும், அப்பாவின் நிரந்தர மறைவின் பின்னான வாழ்க்கைக் காலத்திலும், அந்தத் துன்ப நிகழ்வுகளின் தாக்கம் அம்மாவை அதிகம் தாக்காது இருப்பதற்காக தனது கலகலப்பையே தாயின் வசமாக்கினாள் அக்கினோ.

இன்று எல்லாத் துயரங்களையுமே அம்மா தனியாகச் சுமந்து கொண்டிருக்கிறாள்.

அக்கினோ எம்மோடு இருந்தபோது ஒருநாள்.

'அப்பாவின்ரை படத்துக்கு இடது பக்கம் என்ரை படமும் வலது பக்கம் அக்காவின்ரை படமும் வைக்க இடம் விடுங்கோ அம்மா' என்று தாயிடம் சொன்னதாகச் சொன்னாள்.

எங்களுடைய ஒவ்வொரு போராளிகளும் ஒன்றை ஆழமாக உணர்ந்திருக்கின்றார்கள்.

என்றோ ஒருநாள்.. அது இன்றோ ... நாளையோ ... அல்லது இன்னும் சில காலங்களின் பின்னோ. இந்த மண்ணிற்கான மரணத்தை நாம் சந்திப்போம் என்ற உண்மைதான் அது. அதனால் தானோ என்னவோ, சண்டைக்குப் போக வேண்டும் என்று எல்லோரும் சண்டை பிடித்துக் கொள்கிறார்கள்.

அப்படித்தான் அக்கினோவும்.

சண்டை என்றதும் அவள் சந்தோஷப்படுகின்ற கணங்களைத்தான் பார்த்திருக்கின்றோம்.

விடுதலைப்புலிகள் எல்லோருமே கூறுகின்ற, 'நல்லா அடிபட வேணும். நிறைய ஆயுதங்கள் எடுக்க வேணும் அதுக்குப் பிறகு தான் சாகவேணும்' என்பதைத்தான் அக்கினோவும் சொல்லிக் கொண்டிருப்பாள்.

கட்டுவன் சந்தி இராணுவ மினி முகாம் முன்னால் இவள் காவல் நின்ற காலம்... இவள் தான் குழுவின் இரண்டாவது பொறுப்பாளர் பலாலி இராணுவத்தினர் அடிக்கடி வெளியேற முற்படும் முக்கிய பாதைகளில் கட்டுவன் சந்தியும் ஒன்று. இந்த மினி முகாமுக்கு முன்னால் காவல் நிற்கும் எங்கள் குழுவில் அடிக்கடி உறுப்பினர்களை மாற்ற வேண்டி வரும் ஏனென்றால் அடிக்கடி தாக்குதல் நடக்கும்போதோ, அல்லது வெளியேறும்போதோ எம்மில் பல போராளிகள் வீழ்ந்திருப்பார்கள், அல்லது காயப்பட்டிருப்பார்கள்.

அக்கினோ வருவதற்குஐந்து நாட்கள் முதல்தான் கட்டுவன் நிலையிலிருந்து வெளியேற முற்பட்ட இராணுவத்தினருடன் மோதியதில் சுந்தரியுடன் எட்டுப் போராளிகள் வீரமரணமடைந்தனர். அக்கினோ சென்ற நான்கு நாட்களுக்குள் திரும்பவும் அந்த இடத்தில் இராணுவம் வெளியேறியது. கப்டன் சுந்தரி வீரச்சாவடைந்த தாக்குதலில் ஏற்பட்ட எமது தரப்புஇழப்புக்களை உற்சாகப் படுத்தி இருந்தது போலும். ஆனால் அன்றைய சண்டை முடிவோ வேறும் திரி இருந்தது அன்று எதிரிகளை பின்வாங்கச் செய்ததில் அக்கினோவின் துப்பாக்கிக்கு அதிக பங்குண்டு

அக்கினோவுக்குக் கணிசமான ஆங்கில அறிவுண்டு. அத்தோடு எந்தத் துறையிலும் விடயங்களைக் கிரகிக்கும் ஆற்றல் உண்டு. தான் பெற்றிருக்கும் அறிவினை சக போராளிகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்ற துடிப்பு அவளுக்கு நிறையவே இருந்தது. அதனால் தான் பயிற்சி முகாமில் கூட கடும் பயிற்சிகளுக்கு நடுவேயும் அவள் இரவில் அவர்களுக்காக ஒரு மணிநேரம் ஒதுக்கி இருந்தாள்.



அக்கினோ

வவுனியாவில் இராணுவம் வெளியே வந்த காலகதில் காட்டின் ஒரு பக்கத்தில் இவளின் குழுவும் நின்றது திசைகாட்டியை (கொம்பஸ்) எவ்வாறு படிக்க வேண்டும் என்று எல்லாருக்கும் தெரிந்திருக்க வேண்டும். எந்த நேரமும் வந்து விழுந்து வெடித்துக் கொண்டிருக்கும் ஷெல்களுக்கு நடுவே ஒரு இடத்தைக் குறி வைத்துத் திசைகாட்டி மூலம் அந்த இடத்துக்குப் போய் வந்து, பின்னர் தனது குழுவினருக்கும் அவ்வாறே காட்டிக் கொடுத்து, போய் வரப் பழக்கினாள்.

காட்டிலே போர் நடக்கும் போது காடு மாற நேரிட்டால் அதுவே போராளியின் இழப்புக்கு மிகப் பெரிய காரணமாகி விடும். போராளிகளின் இழப்பு ஒரு புறமும், இராணுவ முன்னேற்றம் மறுபுறமுமாகப் பாதகமான தாக்கங்களுக்குத் தான் காரணமாயிருக்கக் கூடாது என்பதில் அவள் உறுதியாக இருந்தாள்.

வவுனியாவிலிருந்து வந்தவுடன் ஆனையிறவுச் சண்டை ஆரம்பித்து விட்டது. வெட்டவெளிகளில் இராணுவத்தினரை இறக்க விடாது காவல் செய்யும் பகுதியில் அவள் கடமையிலீடுபட்டிருந்தாள்.

அடுத்தடுத்துச் சண்டைகள் ஓய்வெடுக்க எமது போராளிகளுக்கு நேரமில்லை குண்டுச் சத்தங்களுக்கும், குருதி வெள்ளத்துக்கும் நடுவே எங்கே நாங்கள் ஓய்வைத் தேடுவது? எப்படி ஓய்வெடுப்பது? முப்படைத் தாக்குதலுக்கும் முகம் கொடுத்தபடி முன்னேற வேண்டியவர்களாயிற்றே நாங்கள் களைப்பும், அலுப்பும் இருக்கத்தான் செய்யும், ஆனால் அவையே எம்மைக் கட்டுப்படுத்தி விட முடியுமா? நித்திரை என்பது எம்மை விட்டு நிரந்தரமாகவே வெளியேறி விட்டால் என்ன என்று எண்ணுபவர்கள் தான் நங்கள் கண்ணுக்குள் நித்திரை சுழன்று கொண்டிருக்கும். அதுவும் கண்ணில் ஆடி ஆடித்தான் நடந்தாலும் கண் மூடி விட முடியுமா? கண் மூடக் கண் மூட எம் தேசம் காணாமல் போய் விடுமல்லவா? அதனால் தான்...

ஓய்வு இல்லாத தேசத்தின் எந்த எல்லையில் சண்டை நடந்தாலும் அங்கு எட்டி நடந்து கொண்டிருக்கின்றோம்.

ஆனையிறவுச் சண்டையின் வேகம் குறைய மணலாற்றில் சண்டை ஆரம்பித்து விட்டது. அக்கினோவின் குழுவும் மணலாற்றுக்கு விரைகிறது மணலாறு எங்கள் தேசத்தின் மையப் புள்ளி மணலாற்றுக் காடுதான் எங்கள் தாய்வீடு பிராந்தியங்களிடமிருந்து செட்டைக்குள்ளாய் எமை வளர்த்த தாய்க்கோழி பிராந்திய வல்லரசு ஒன்றை எமது பிரதேசத்திலிருந்து பின்வாங்கச் செய்யுமளவுக்கு அவர்களுக்கு இழப்பை ஏற்படுத்திய இடம். அங்குல அங்குலமாக அந்நிய இராணுவம் கால் பதிக்கத் தேடியபோதும் தமிழினத்தின் தலைவரைத் தக்க வைத்துக் காத்த பெருமை மணலாற்றுக்கு மட்டும்தான் உண்டு குண்டுகளைத் தாங்கித் தாங்கியே மணலாற்றுக் காடு வலிமை பெற்று விட்டது. உரிமைப் பேர் அல்லவா.

உக்கிரமான சண்டைதான் காடு பற்றி எரிகின்றது. எங்கும் ஒரே புகை மண்டலம் தான் மணலாறு மண் அதிர்ந்து கொண்டே இருக்கின்றது. முதல்நாள் சண்டையின் போது அக்கினோ நின்ற பக்கமாக இராணுவம் முன்னேறியது. அங்குல நிலம் கூட எதிரியை அசைய விடாத சண்டை. அக்கினோவின் குழுவில் இரண்டு போராளிகள் வீழ்ந்து விட்டார்கள். ஒரு உடல் கைப்பற்றக் கூடியதாக இருந்தது ஆனால் அடுத்தது ...எங்களுக்கும் அவர்களுக்கும் இடையில்.. அவர்களுக்கு மிக நெருக்கமாக......

வீழ்ந்த போராளிகளின் உடலங்களை மீட்பதற்காகவே புதிய போராளிகள் வழுகின்ற வரலாறுதானே எம் வரலாறு. போர் நிலைமை உடனுக்குடன் பொறுப்பாளருக்கு அறிவிக்கப்பட வேண்டும். அக்கினோ அறிவிக்கின்றாள்.

''பொடி'' எடுப்பது கஷ்டம்தான் அக்கா ஆனால் எப்படியும் நான் எடுப்பேன்.''

தலை நிமிர்த்த முடியாதவளுக்குத் தரையோடு தரையாக வரும் துப்பாக்கிச் சூடுகளுக்கு அடியில ஊர்ந்து முன்னேறினாள். எப்படியோ உடலை எடுத்து விடுகிறாள். அந்த இடத்தில் அனைவருக்கும் ஒரு உறுதி பிறக்கிறது. கடைசிவரைக்கும் இந்தச் சண்டையில் எந்த உடலும் எம்மால் கைவிடப்படக் கூடாது என்பதில் எல்லோரும் முனைப்பாக இருந்தோம்.

ஒத்துழைக்க மறுத்த காட்டுச் சூழலாலும், நித்திரையோ, குளிப்போ இல்லாத கடமையின் இறுக்கத்தாலும், அநேகமான போராளிகளுக்கு காய்ச்சல் வந்து விடுகிறது. அக்கினோவுக்கும் காய்ச்சல் தான்

காய்ச்சலுடன்தான் மணலாற்றுப் பகுதியில் மகளிர் பிரிவிற்கான மருந்து, உணவு, ரவை விநியோகங்களைப் பொறுப்பெடுத்துச் செய்து கொண்டிருந்தாள்.

இராணுவத்தினர் ஒரு பக்கமாக முன்னேற முயற்சிக்க, அக்கினோ அந்த இடத்துக்கு விரைந்து, போராளிகளுக்கு நிலைமையை விளக்கிக் கொண்டிருக்கும்போது, அவளது அடுத்த குழு நின்ற பக்கமாக விமானம் பதிந்து எழுந்தது. நிலைமையை நேரில் பார்ப்பதற்காக அக்கினோ அந்த இடத்துக்கு ஓடினாள்.

இன்னுமொருதடவை அந்த விமானம் பதிந்து எழுந்தது.

அக்கினோவின் தசைத் துணுக்குகளும், குருதித் துளிகளும் மணலாற்று மாவெளியில் தெறித்தன அக்கினோ போன்ற நூற்றுக் கணக்கானோரின் இறுதிக் கணங்களை அறிந்து கொண்ட அந்த மணலாற்றுக் காடு இன்று மீட்கப்பட்டு விட்டது இந்தியப் போரின் பின் இது இரண்டாவது சண்டை, முன்னையை விட இப்போது உறுதியாய் நிற்கும் மணலாற்றுக் காடு இனிவரும் காலங்களில் இன்னும் உறுதியாக எழுந்து நிற்கும் ஏனென்றால் அதற்குத் தெரியும் இன்னும் உறங்கும் எங்கள் நம்பர்களைப் பற்றி.

- பாரதி -

# சுற்றுச்சூழல்குறித்து ஆராய புவிக்கோள உச்சிமாநாடு

புவிக்கோள உச்சிமாநாடு தென் அமெரிக்காவிலுள்ள பிரேசில் நாட்டின் தலைநகரமான ரியோடி. ஜெனிரோவில் கடந்த மூன்றாம் திகதி ஆரம்பமாகியுள்ளது.

12 நாட்கள் நிகழவுள்ள இம்மாநாட்டில் சுமார் 178 நாடுகளின்பிரதிநிதிகள்கலந்து கொள்ளுகின்றனர். உச்சி மாநாட்டில் 100 க்கு மேற்பட்ட உலகத் தலைவர்கள் கலந்து கொள்ளுகின்றனர். நேரடியாக அரசியல் தொடர்பற்றது என கருதப்படும் ஒரு மாநாட்டிற்கு உலகத் தலைவர்கள் பெருமளவில் சமூகமளிப்பது இதுவே முதல் தடவையாகும்.

இவர்களுடன் உலக சுற்றாடல் பாதுகாப்பில் அக்கறையுள்ள கிறீன்பீஸ் Greenpeace) போன்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், ஆராய்ச்சியாளர் பத்திரிகையாளர் என முப்பதினாயிரம் பேர் வரை இம்மாநாட்டில் கலந்து கொள்கின்றனர். ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் சுற்றுபுறச் சூழல்அபிவிருத்திப்பிரிவின்ஏற்பாட்டில் இம் மாநாடு இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

1972 ஆம் ஆண்டு சுவீடனின் தலைநகரான ஸ்ரொக்ஹோம் நகரில் உலக சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பது குறித்த முதலாவது உச்சிமாநாடு இடம்பெற்றது இருபது வருடங்களுக்கு முன்னர் இடம் பெற்ற இம் மாநாடு சுற்றுப்

- வேலவன் -

புறசூழல்குறித்த ஒரு ஆரம்பகட்ட செயற்பாடுகளில் மட்டுமே கவனம் செலுத்தியது.

சுற்று புறச் சூழல பெரும் பாதிப்புற்று அபாயகரமான கட்டத்தை அடைந்துள்ள இவ்வேளையிலேயே உலகம்விழித்துக் கொண்டு இது பற்றி தீவிரமாக ஆராய முற்பட்டுள்ளது.

குடிசன அதிகரிப்பால் மூலவளங்கள் வெகுவேகமாக குறைந்து கொண்டே போகிறது. காடுகள், உயிரினங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# அழிவின் கைகள்

சிறுகதை

முற்றத்திலிருந்த மரக் குற்றியின் மேல் முத்தன் அசைவற்று இருந்தான். அவன் விழிகள் ஆகாயவெளியின் எல்லையில் எதையோ வெறுப்புடன் தேடிக் கொண்டிருந்தன.

'இண்ணிக்கு என்ன செய்யேறது' அவனது இதயம் தவித்தது. குடிசையின் இறந்து போன முகட்டு ஓலைகளை காற்று அசைத்து துன்பப் படுத்தியது. அந்தக் குடிசைக்கு உள்ளே' தான் ..... அவனது உயிருக்குயிரான ஜீவன்கள்...... நேற்று முழுவதும் ஒன்றுமில்லாமல்...—

"செ..... எத்தென நாளிக்கு தான் இப்புடி......' ஒரு முடிவுக்கு வந்தவன் போன்று எழுந்தவன் நெஞ்சை அகட்டி கைகளை ஒரு தரம் அகல விரித்து வீசினான் எழுந்து நடந்தவன் வேலிக்கரையில் நின்ற வேம்பில் குச்சியை முறித்து வாய்க்குள் வைத்துச் சப்பினான். வெறுக்கத் தக்க கசப்பு நாவெங்கும் பரவியது. வாயில் கூடிய உமிழ்நீரை காறாப்பித் துப்பி விட்டு கண்டாயத்தை பார்க்க நடந்தான்.

"தேத்தண்ணி தாறெங் குடிச்சுப்புட்டுப் போங்களேன்" பார்வதி சமையற் கட்டுக்குள் நுழைந்து கொண்டிருந்தாள். இப்போ சில நாட்களாக அவள் அடுப்பு மூட்டுறது அதற்குத் தான்...வெறும் சாயத்திற்காக மட்டும் தான்......

திரும்பி வந்தவன், குடத்து நீரை எடுத்து வாயை அலசி விட்டு அதே மரக்குற்றியில் தன்னைச் சோரப் போட்டுக் கொண்டு பழைய படியும் அசைவற்று இருந்தான்.

தேனீர் நாக்கைநனைத்தது. 'வெறுமையான வவுத்தை நிரப்ப இந்த சாயத்தால எப்படித் தான் முடியுதோ ......' பார்வதிக்கு வியப்பாக இருந்தது. முத்தனுக்கு முன்பாக ஒரு நாரையை போல கழுத்தை உள்ளுக்கு இழுத்து கால்களை மடக்கிக் கொண்டு அவளும் இருந்தாள்.

முத்தன் நிமிர்ந்து தனது மனைவியைப் பார்த்தான். பார்வதிமுகம்மெலிந்துஇளைத்துப் போயிருந்தாள். உதடுகள் இறுக்கமாக மூடியிருந்தன தலையில் சில நரைகள் தெரிந்தன வறுமை மனிதர்களை எப்படி எல்லாம் தின்று தீர்க்கிறது.

"பிள்ளைங்க எழும்பலையா"

"இன்னமும் இல்லீங்க" பார்வதி இரக்கத்துடன் அவனைப் பார்த்தாள். 'அதுவ எந்திருச்சு பசியின்னா.....'' நினைக்கவே அவளுக்கு அழுகை வந்தது இதயம் பாரமாக கனத்தது.

"நான் ஒருக்கா வெளியில பேயத்து வாறப்ப" அவன் வேகமாக நடந்தான். மனது உறுத்தியது. கால்கள் நடக்க முடியாமல் தயங்கின.

'பிள்ளைங்க எந்திரிச்சு அதுவ பசியின்னு அழுதா அதை எப்புடித்தான் பொறுத்துக்கப் போறாளோ......!' முத்தன் வீதிக்கு வந்து நடந்தான். 'வெடிஞ்சு எழும்பி மொதமொதலா...... கடனுக்கு போயிநிக்கிறது......' அவனுக்கு கூச்சமாகவும் அச்சமாகவும் இருந்தது, நடையில் சோர்வு புகுந்து கொண்டது. ஆனாலும் என்ன செய்வது ..

தரிசாய் கிடந்த வயல் வெளிகளிற்கு நடுவில் பட்டிகள் பரவி நின்றன. வீதிக்கு அருகாக வாய்க்காலில் தண்ணீர் சத்தமிட்டு பாய்ந்து கொண்டிருந்தது. கட்டுக்கு பழுதென்று குளத்து துலுசை யாரோ திறந்து விட்டிருந்தார்கள்.

செ... இதென்ன அநியாயம் வயல்கள் வெறுமையாய் கிடக்கின்றன, தண்ணி விழலுக்கு பாயுது...... சீ...... இது பெரும் கொடுமை ..... வழமையான நாட்களென்றால்... ! இப்போ உழவு காலம் இந்தச் சேத்து நிலத்தில அவன் நீந்திக் கொண்டிருப்பான்.

1977. தமிழர் சிங்களர் கலவரம் ஒன்று நடந்தது. அதை ஏன் தமிழர் சிங்களர் கலவரம் என்று சொல்வான்.? சிங்களவருக்குக் கெதிராக தாங்கள் அழிபட்டுப் போகும் இறுதிக் கணம் வரைக்கும் எந்தத் தமிழனும் ஒரு துரும்பைக் கூட தூக்கவில்லையே?

சரி, அப்போது தான், அந்தச் சிங்கள மிருகங்கள் மனிதர்கள் மீது பாய்ந்த அந்த நாட்களில் தான் மாத்தளையிலிருந்து முத்தன் ஓடி வந்தான்.

ஐயோ! அதுவொரு பயங்கர இரவு. இருளில் தீப்பந்தங்களுடன் வந்த சிலர் அந்த தோட்டத்து லயன்கள் மீது மிருகங்களைப் போல் பாய்ந்தார்கள். அவலச் சத்தம் மலைகளில் மோதி மீண்டும் அவர்களின் காதுகளுக்கே திரும்பி வந்தது.

அதன் பின்பு, முத்தன் அவனது அப்பனையோ, தாயையோ அவனது அன்புக்குரிய தங்கையையோகாணவே இல்லை. எப்படியோ கூட்டத்தோடு கூட்டமாக வன்னிக்கு வந்து சேர்ந்தான்.

இங்கு தான் என்ன மாறுதல், ஒன்றுமில்லை. அங்கு கொழுந்து பறிந்தவன் இங்கு அருவி வெட்டினான். பத்தாதற்கு மிளகாய்க்கு விளும். வெங்காயத்திற்குள்ளும் நின்றான்.

அவனது வாழ்வில் எந்த மாற்றமும் ஏற்படவே இல்லை. ஆனாலும் இரண்டு வருடங்கள் கழிந்த போது அவனொரு திறமையான கூலியாக மாறி இருந்தான்.

அந்த வருடம் தான் ... ஓர் அறுவடை காலம். காளியப்பன் தன் மகளை முத்தனுடன் இணைத்து வைக்க ஒப்புக் கொண்டான். பார்வதிக்கும் மனதிற்கு நிறைவாக இருந்தது.

கிராமத்தை அண்டி அதன் முடிவோடு இருந்த காட்டுத் துண்டை வெட்டி முத்தன் தனது வாழ்விடத்தை அமைத்துக் கொண்டான். விதானை யாருக்கு அது அடியோடு பிடிக்காது விட்டாலும் எப்படியோ முத்தன் அங்கேயே இருப்புக் கொண்டு விட்டான்,

மனமொத்த தம்பதிகள்... மகிழ்ச்சிக்கு என்ன குறையிருக்கிறது.? அவர்களிருவரும் சேர்ந்தே வேலைக்கு சென்றனர். வயல்களிலும், தோட்ட நிலங்களிலும் வருடம் முழுவதும் அவர்களிற்கு வேலை இருந்தது.

பார்வதி அடுத் தடுத்து இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயானாள். அதன் பின்பு அவர்களுக்கு குழந்தைகள் கிடைக்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல முத்தனின் மனதில் புதிதாக ஓர் ஏக்கம் பற்றிக் கொண்டது. பார்வதியும் தான் அளவுக்கு அதிகமாக அதை விரும்பினாள். மனிதர்கள் எப்போதும் அப்படித் தானே. இடைக்காததற்காக ஏங்கித் தவிப்பது மனித இயல்பு தானே.

முடிவாக எட்டு வருடங்களின் பின்பு அவர்களுக்கு ஆண் குழந்தை கிடைத்தது. அதன் பின்பு முத்தன் பார்வதியை வயலுக்கு வர வேண்டாம் என்று சொல்லி விட்டான். மனைவியும் பிள்ளையும் அவனுக்கு புனிதப் பொருட்களாக போய் விட்டார்கள். அவன் வயல்களில் நின்றான். ஒரு மாட்டைப் போல் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைத்தான்.

பார்வதியும், குழந்தைகளும் தான் அவனது உலகமாக போய்விட்டது. இப்போதெல்லாம் வெளியில் நேரத்தை செலவிடுவதை குறைத்து விட்டான். வேலை முடிந்ததும் வீட்டுக்கு வருவான் உடலை அவசரமாக கழுவி விட்டு பிள்ளைகளிடம் ஓடுவான்.

கடைசி மகன் அப்பாவின் மயிரடர்ந்த நெஞ்சில் ஏறுவான். உதைப்பான் தவழ்வான், அப்பாவின் முகத்தில் அடித்து மயிரைப் பிடித்திழுப்பான். அவனது செல்லச் சிரிப்பும், தலையை ஆட்டிக் கதை சொல்லும் அழகும் முத்தனை இயக்கும் ஜீவசக்தியாக இருந்தது. அவர்களின் மகிழ்ச்சியான விளையாட்டு தான் அந்தக் குடிசை முழுமைக்கும் வெளிச்சத்தை வீசியது.

நாட்டில் இப்படி மாற்றங்கள் வரும் என்று யார் கனவு கண்டார்கள். பொருளாதாரத் தடை என்றார்கள். தமிழ் நிலத்திற்குள் எனி எதுவுமே வராது என்றார்கள். முத்தனுக்கு விளங்கவில்லை.

'தமிழங்களென்டா அடி வாங்கனும், எபபோது அடிமையாய் இருக்கனும் எண்டு நினைக்கிறாங்க . செ ... இந்தக் கொடுமைங்க எப்ப தொலையப் பேவுது' அவன் அடிக்கடி முணுமுணுத்தான்.

## இளவேனில்

உழவுக்கு எண்ணெ இருக்க வில்லை. அப்படியே உழுதாலும் பசளையோ கிருமி நாசினியோ கிடைக்க விலலை. வயல் வெளிகள் தரிசாகின. தோட்டங்களும் கைவிடப்பட்டன.

பொருட்களின் விலையோ மலைபோல உயர்ந்தது முத்தன் ஆடிப் போனான். வறுமை அவனது வீட்டை ஆக்கிரமித்தது. பசியும். பட்டினியும் வீட்டிற்குள்குடிபுகுந்து இருப்புக் கொண்டன,

'நமக்கென்னா உணவு தேவையில்லை, மருந்து தேவையில்லை, ஏன் ...உயிரே தேவையில்லை -' முத்தனின் நெஞ்சம் சிங்கள அரசின் கொடிய செயல்களை எண்ணி கொதிக்கும். வாழ்வை ஓட்டுவதற்கு அவன் போராடிப் பாாத்தான். உண்மையில் சொல்வதானால் அவனுக்கு பிழைப்புக்கு எந்த வழியுமே இருக்கவில்லை. காட்டிற்க்கு வேட்டைக்கு போனான். சில வேலைகளில் கிடைத்த உடும்பும், தேனும் வீட்டுக்கு சாப்பாடு போட்டது. ஆனால், ஒல்லியாய் சோர்ந்து போன கிழட்டு நாயால் அவனுடன் எப்படி வேட்டைக்கு போக முடியும்.

முத்தனின் கண்களிற்கு முன்பாகவே அவனது மனைவியும் குழந்தைகளும்.. பட்டினியுடன் போராடினார்கள். பிள்ளைகளின் நிலையைப் பார்க்க அவனுக்கு கவலை நெஞ்சைப் பிளக்கும் அவர்களைப் பார்க்காமல் விலகி ஓடப் பார்ப்பான், அது எப்படி முடியும்? தவிர்க்க வேண்டுமென்றே நினைத்துக் கொண்டே அது முடியாமல் கடைசி மகனைப் பார்ப்பான் அவனது கதைகள் சொல்லும் கண்கள் எங்கேயோ குழிக்குள் விழுந்து நெஞ்சுவற்றிப் போய் விலா எழும்புகள் வெளிக்கிழம்பி .. முத்தனின் கண்கள் கலங்கும் வேதனையை தாங்க முடியாமல் அவன் நெஞ்சம் தவிக்கும். அந்தக் குடிசையை விட்டு தப்பி ஓடப் பார்ப்பான், பார்வதியின் பரிதாபமானபார்வை அவனைத் தடுத்து நிறுத்தும்.

இந்த நிலையில் ஒருவருடம் எப்படிக் கடந்து போனது?

முத்தன் தோளில் கிடந்த துண்டை எடுத்து உதறிவிட்டு முகத்தை அழுந்தித் துடைத்தான்.

கடன் கடன்— எப்ப என்னென்று கொடுக்கப் போறன் அவனது உடல் ஒருதரம் நடுங்கியது.

"இஞ்சைரப்பா இவன் முத்தன் வந்திருககிறான்', மணியத்தார் வழமைபோன்றுதனது மனைவிக்கு அறிவித்தல் விடுத்து விட்டு முத்தனை உற்றுப் பார்த்தார். அவன் வந்த நாள் தொடக்கம் அவருக்கு அவனும் ஒரு பிள்ளை,

"அம்மா. ரெண்ணு மூணு நாளா .. வீட்டில ஒண்ணுமில்லை... பிள்ளையளும்... ' "எடபடுபாவி.ஏன்ரா நேற்றே வரயில்லை" அந்தக் கிழவி திட்டிக் கொண்டே வீட்டிற்குள் போனாள். ஒரு துணிப் பையில் இரண்டு மூன்று கொத்து அரிசி.

"இந்தா கொண்டோடு. பிறகு வந்து கதை" முத்தன் நடந்தான் இல்லை ஓடினான் எது எப்படியோ அவன் கால்கள் நிலத்தில் படவில்லை.

எதிராக ஒரு பெண்—தலைவிரி கோலமாக கையில் என்ன...?பார்வதி...?

"ஐயோ, ஏண்ட பிள்ளையை காப்பாத்துங்க...காப்பாத்துங்க" பார்வதி பதறிக் கொண்டிருந்தாள்.

ஆசுபத்திரி பதினாலு கட்டைக்கு அங்கிட்டு இப்ப எப்படி... திரும்பவும் முத்தன் ஓடினான்.

வைத்தியசாலைக்கு,

அந்த அனுபவம் மிகுந்த நரைவிழுந்த வைத்தியர்அமைதியாக மரணத்தைத் தேடிப் போகும் எந்த மனிதரையும் காப்பாற்றும்வலுவற்றுநடந்து கொண்டிருந்தார்.

"ஐயா எண்ட பிள்ளையை காப்பாத்துங்க"

வைத்தியர் மெதுவாக முத்தனின் பிள்ளையைத் தூக்கி நன்றாகப் பார்த்தார். கண்கள் குழி விழுந்து, விலா எலும்புகள் சிரிக்க, கால்கள் சூம்பிப் போய் .. வயிறு மட்டும் வற்றாமல்......வறுமை அவனைக் கொல்கின்றது—...... இல்லை, தமிழ்க் குழந்தை என்பதற்காக அவன் சாகடிக்கப்படுகின்றான்.

அந்தக் கிழவரின் கண்கள் கலங்கியது. குழந்தையை வளர்த்தி விட்டு விலகி நடந்தார்.

"ஐயா.கையை விரிச்சுப் பிடாதீங்க... ஏண்ட பிள்ளையை காப்பாத்துங்க" பார்வதி கதறி அழுதாள்.

வைத்தியர் திரும்பியும்பாராமல் நடந்து கொண்டிருந்தார். கால்கள் பின்னித் தள்ளாடின. அவர் விழுந்து விடுவார் .. அருகில் வந்ததாதி ஒருத்தி அவரைத் தாங்கிப் பிடித்தாள் அவரின் கண்களில் ..

"ஐயா, அந்தப் பிள்ளை... தயக்கத்துடன் அவள் வார்த்தைகள் வெளிவந்தன." அந்தக் குழந்தையை சாகவிட எனக்கு விருப்பம்மில்லை. அந்தக் குழந்தையை மட்டுமல்ல இந்த யாரையுமே சாகவிட எனக்கு விருப்பமில்லை ஆனா .... எதை வைச்சுக் கொண்டு நான் யாரை காப்பாத்திறது இந்த ஆஸ்பத்திரி முழுவதும் தேடிஎங்காவது மருந்திருந்தா கொண்டுவா. நான் எல்லோரையும் காப்பாத்திறன்" வைத்தியர் நடந்து கொண்டுருந்தார்.

"ஐயோ... ஏண்ட பிள்ளை போட்டானே' காற்றில்படர்ந்தபார்வதியின் குரல் அவரின் இதயத்தில் பாரமாக கனத்தது.

---

## கோவலன்

வழமைதெரியாது.அண்ணாவி சொல் மட்டும்தான் தெரியும் என்று நினைவுபடுத்திக்கொண்டார்.

★ ★

ஒரு இலக்கிய வாதியின் திறமை அவன் பேனாவின் மூலம் தெரிகிறதோ, அதே போல் ஓர் அண்ணாவியின் திறமை அவர் கூத்துகளில் தான் தங்கியிருக்கிறது.

கொழும்பிலும், கண்டியிலும் பல மேடைகளிலும், கொழும்பில் குறிப்பாக வானொலி, ரூபவாஹினி போன்ற தொடர்புச் சாதனங்களிலும் அண்ணாவி சுப்பிரமணியத்தின் கூத்துக்கள் ஆடப்பட்டுள்ளன.

1968இல் றேடியோ சிலோனில் கோலவன் கூத்து ஒலி பரப்பப்படுமுன், கொழும்பில் தமிழ் சூழலுக்கிடையே தனது கூத்தை மேடையேற்ற விரும்பிய போது ஊக்கத்தைக் கொடுத்தவர்கள் வானொலியில் ஒலிபரப்பப்பட்டுக் கூத்து 'நல்லபெயர்' வாங்கிய பிறகு தன்னோடு இணைந்து கொண்டார்கள் என்கிறார்.

தொடர்ந்தாற்போல கொழும்பில் பல இடங்களில் இவரின் கூத்து ஆடப்பட்டது. கொழும்பில் சரஸ்வதி மண்டபம், லும்பினித் தியேட்டர் ஆகிய மேடைகளிலும், பேராதனைப் பல்கலைக்கழக அரங்கிலும் கோவலன் கூத்து ஆடப்பட்டது முல்லைத்தீவில் இலைமறைகாயாக இருந்த அண்ணாவி சுப்பிரமணியம் ஒரு கலைஞராக இப்போது வெளியில் தெரியப்பட்டு விட்டதால் அவர் கொழும்பில் கௌரவிக்கப்பட்டார். லும்பினியில் அவருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டது கொழும்புப் பிரவேசம் இவரது படைப்புத் திறனை இவரை அறியாதவர்களுக்கு வெளிப்படவைத்தது. சக கலைஞர்களை மதிக்கும் சுபாம் மிக்கவர் அண்ணாவி சுப்பிரமணியும் எமது சொல்லாடலின் முடிவில்லவர முத்துவை ஞாபகப்படுத்திக் கொள்கிறார்.எந்தவித தொய்வும் இல்லாமல் மகான காண்டத்தை ஆடியவர். அவர் இடத்தை யார் நிரப்பப்போகிறார்களோ? என்று அங்கலாய்க்கிறார்.

யாழ்ப்பாணம்

# தமிழீழப் பெண் போராளிகள்

## ஒரு கண்ணோட்டம்

தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தில் பெண்களும் நேரடியாகப் பங்கு கொண்டு அளப்பரிய பணிகளை ஆற்றிவருகின்றார்கள் என்பது உலகறிந்த ஒரு விடயமாகும்.

இன்று, தமிழீழ மக்களைப் பொறுத்தளவிலோ இது ஒரு சர்வசாதாரண நிகழ்ச்சியாகும். சீருடை அணிந்தவாறு தமது துப்பாக்கிகளை தோளில் சுமந்தபடி மிதிவண்டிகளில் செல்லும் பெண் போராளிகளை மக்கள் அன்றாடம் கண்டு வருகின்றார்கள்.

ஆனாலும், பெண்கள் ஆயுதம் தாங்கிக் களத்தில் நின்று போர் புரிவதை ஏற்றுக் கொள்ளாத -- விரும்பாத மனப்பான்மையைக் கொண்டவர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

ஆயுதமேந்திய பெண்கள் போர் புரிவது தமிழ்ப்பண்பாட்டிற்கு முரணானது எனவும் எம்மில் சிலர் வாதிட முனைகின்றார்கள்.

எது எப்படியிருந்த பொழுதிலும் தமிழ் யுவதிகள் ஆயுதப் போரில நேரடியாக இணைந்துகொண்டது தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வலிமை சேர்த்திருக்கின்றது என்பதை எவரும் மறுக்க முடியாது.

போராளிகளின் எண்ணிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் அதனால் போராட்டம் கண்ட கணிசமான வெற்றிகளும் இதை நிரூபிக்கின்றன.

விடுதலைப் போராட்டங்களில் பெண்களும் பங்கு கொண்டு ஆயுதமேந்திப் போராடுவது என்பது உலகில் இன்று பரவலாக நடைபெற்று வருகின்ற போதிலும்கூட இது ஒரு இயற்கைக்கு விரோதமான செயல் எனப் பார்ப்பது இன்றும் தொடர்ந்து



ஆயுதங்களைக் கையாள்வதில் திறமை பெற்ற பெண் புலிகள்!

கொண்டேயிருக்கின்றது.

இன்று, உலகம் பூராகவும் பெண்கள் சாதித்துக் கொண்டிருக்கும் பல்வேறு சாதனைகள் மத்தியிலும் பெண்களை தரங்குறைத்துப் பார்க்கும் ஒரு கருத்துலகம் பலமாக இருக்கத்தான் செய்கின்றது.

அக் கருத்துலகம் பெண்களை குடும்பம் என்ற குறுகிய வட்டத்துக்குள் வைத்தே பார்க்க விரும்புகின்றது. பிள்ளை வளர்ப்பு, குடும்ப பராமரிப்பு போன்ற வீட்டு வேலைகளை மட்டும்தான் பெண்களுக்கு இயற்கை கொடுத்த வேலைகள் என அந்தக் கருத்துலகம் பறைசாற்றுகின்றது.

இப் பிற்போக்குத்தனமான- ஆண் ஆதிக்கம் கொண்ட இக் கருத்துலகம் மக்களை பற்றிப் பிடித்தே வைத்திருக்கின்றது.

பெண்கள் ஆயுதமேந்தி தங்களையோ அல்லது தங்களது இனத்தையோ பாதுகாக்கப் போராடும்போது குறித்த அந்த நாட்டில் ஏதோ பாரதாரமான விடயங்கள் இருக்கின்றன என்று உலகம் முடிவெடுக்கின்றது. இப்படித்தான் தமிழீழத்தையும் உலகம்பார்க்கின்றது.

ஆசிய நாடுகளிலுள்ள சமூக அமைப்புக்களும் — பண்பாடுகளும் பெண் அடக்குமுறை நிரம்பப் பெற்றவையாகவே காணப்படுகின்றன. தமிழீழமும் இதற்கு விதிவிலக்கல்ல.

பெண் ஒடுககுமுறையை நிலைப்படுத்தும் சித்தாத்தங்களும், சம்பிரதாயங்களும் பண்பாடுகளும், சமூக அமைப்புகளும் பெண்களை காலம் காலமாக ஒடுக்கி வருகின்றது.

ஆனால் சமூக ஆதிக்கம் பெற்ற இவ் ஒடுக்குமுறைக் கருத்துக்களை உடைத்தெறிந்தபடி பெண்கள் ஆயுதமேந்தி போராட முனைகின்ற தன்மை குறித்த அத்தேசம் சந்திக்கும் அடக்குமுறைகளின் கொடூரத்தை வெளிப்படுத்துகின்றது.

இந்தவகையில் த. வி. போராட்டத்தில் பெண்களின் நேரடிப் பங்களிப்பானது தமிழீழமக்கள் சந்திக்கும் தேசிய ஒடுக்கு முறைகளை உலகிற்கு துலாம்பரமாக வெளிப்படுத்துகின்றது. அதேசமயம் ஆயுதப போரில் தமிழ்ப்பெண்கள் நிகழ்த்திவரும் சாதனைகள் உலக பெண் சமூகத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுததி வருகின்றது என்பதும் மறுப்பதற்கில்லை.

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தில் பெண்களும் ஆயுதமேந்தி கரந்தடிபோர் முறைகளில ஈடுபடுவது உலகில் பரவலாக நடைபெறுகின்றன.

ஆனால் தமிழ்ப்பெண்கள் வெறுமனே கரந்தடி முறைப் போர்களில் மட்டுமல்ல கனரக ஆயுதங்கள் சகிதம் நேருக்கு நேர் மோதும் மரபு வழிப் போர்முறைகளிலும் நேரடியாகப் பங்குகொண்டு சாதனை படைத்து வருகின்றார்கள் என்பது உலகில் எங்குமே நடைபெறாத விடயம்.

பெண் உலகில் நடைபெற்று வரும் இப் பூகம்பமானது அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் இராணுவத்திலுள்ள பெண்களுக்கு பாரிய நம்பிக்கையையும், புத்தெழுச்சியையும் கொடுத்துள்ளது.

குறித்த இந்த நாடுகளில் இராணுவத்தில் பெண்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டு போர் முனைகளுக்கு இவர்கள் அனுப்பப்பட்டாலும் கூட நேரடிச் சண்டைகளில் இவர்கள் ஈடுபடுத்தப்படுவதில்லை. மருத்துவம், விநியோகம், தொலைத்தொடர்பு போன்ற பின் கள வேலைகளிலேயே பெண்இராணுவம் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

ஒரு நாடு போர் நெருக்கடிக்குள்ளாகும்போது அப் போர்ச்சூழலில் இருந்து நாட்டைப் பாதுகாக்க பணிபுரியும் பெண்களது பங்கை மறுக்காது விட்டாலும்கூட இந்த இராணுவத்திலுள்ள ஆண் மேலாதிக்கமும், சமூகத்திலுள்ள பழைமைவாத எண்ணங்களும் பெண்கள் நேரடியாகப் போர் புரிவதை தடுக்கின்றன.

இது பெண்கள் போருக்குத் தகுதியற்றவர்கள் என்ற கருத்தையே பிரதிபலிப்பதாக உள்ளது.

ஆனால் பெண்களாலும் திறமையாக போர்புரிய முடியும் என்ற உண்மையை நிரூபித்துக் காட்டுவதில் தமிழீழ பெண்கள் உலகத்திற்கு முன்னுதாரணமாகத் திகழ்கின்றார்கள்.

அபார போர்த்திறன், சாவுக்கு அஞ்சாத துணிவு, எதையும் எதிர் கொள்ளும் மனவுறுதி ஆகியவற்றில் தமிழீழப் பெண் போராளிகள் சிறந்து விளங்குகின்றார்கள் என்ற புகழ்மாலை எமது எதிரியான சிங்கள இராணுவத்

**அடேல் ஆன்**

திடமிருந்தே வந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது.

பெண்கள் ஆயுதமேந்திப் போரிடுவது எமது பண்பாட்டிற்கு விரோதமானது என சிலர் அங்கலாய்க்கின்றார்கள் இது ஒரு பிற்போக்குத்தனமான கருத்தாகும்

எமது இலக்கிய வரலாறும் பெண்களை, குழந்தைகளை பெற்று வளர்க்கும் ஒரு அன்பான தாயகவும் ஆண்களுக்கு வீரத்தை ஊட்டி அவர்களை போருக்கு அனுப்பி விட்டு பெண்களை வீட்டிற்குள் முடக்குவதைத்தான் கூறியிருக்கின்றது. அதைத்தான் பெண்மை என்று போற்றியிருக்கின்றது.

இதன் காரணமாக இது தான் எங்கள் பண்பாடு மரபு என்றும் இதைத்தான் நாங்கள் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணப்பாடும் எமது மக்களில் கணிசமானவர்களிடம் உண்டு.

ஆனால், தன்னைப்பாதுகாத்துக் கொள்வதற்காகப் போராடவும், தனது இனம் அடக்குமுறைக்குள்ளாக்கப் படும்போது அதற்கெதிராகப் போராடவும் ஆண்களைப் போன்று பெண்களுக்கும் உரிமை உண்டு. தங்களது சொந்த வாழ்வை எப்படி அமைத்துக்கொள்வது எனத் தீர்மானிக்கும் உரிமையும் பெண்களுக்கு உண்டு. அத்துடன் தான் பிறந்த நாட்டிற்காக தேசாபிமான உணர்வுடன் பணிபுரியப் புறப்படும் ஒரு பெண்ணை தடுக்கும் உரிமை எவருக்கும் கிடையாது.

இன்னும் சொல்லப்போனால் இப்பெண் உரிமையை தடை செய்யாதிருப்பதுடன் நாம் வாழும் நாட்டிற்காக எமது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக பெண்களும் கட்டாயம் பங்கெடுக்கவேண்டும் என்று பெண்களை ஊக்குவிக்கவும் வேண்டும்.

இதேவேளையில் த வி போராட்டத்தில் பெண்களின் பங்களிப்பைப் பற்றிய இன்னுமொரு கருத்தையும் இங்கு பார்ப்பது நல்லது.

தமிழீழ மண்ணை சிங்களப் படையணிகளிடமிருந்து மீட்பதற்காக மட்டும்தான் தமிழ்ப் பெண்கள் போராட்டத்தில் ஈடுபடவில்லை பல்வேறு விதமான சமூக ஒடுக்குமுறை வடிவங்களிலிருந்தும் தமிழீழப் பெண்களை மீட்கவும் போராடுகிறார்கள்.

இனரீதியாகவோ அல்ல சமூக ரீதியாகவோ தமிழ்ச் சமூகத்தில் மிகமோசமான அடக்



களம் நோக்கிச் செல்லும் பெண் போராளிகள் அணி

குமுறைகளுக்கு உள்ளாக்கப் படும் பகுதியினர் யார் என்றால் அது பெண்கள்தான்.

தமிழ் பெண்கள் ஆண் ஆதிக்கத்தால் அடக்கப்படுகின்றார்கள், பேச்சுத்திருமணம், சீதனம் என்றபோர்வையில் பெண்கள் இழிமைப்படுத்தப்படுகின்றார்கள் ஏமாற்றப்படுகின்றார்கள், கையாலாகாத - பொறுப்பற்ற கணவன்மார்களினால் கைவிடப்படுகின்றார்கள் வேலைகளிலும் அதற்குரிய சம்பளங்களிலும் பாரபட்சம் காட்டப்படுகின்றார்கள். மனச்சித்தாத்தங்களினாலும், மரபுவழிச்சம்பிரதாயங்களினாலும், பண்பாட்டுக் கோலங்கள் என்ற போர்வையிலும் தமிழ்ப் பெண்கள் அடக்கப்படுகின்றார்கள் அத்துடன் எதிரிஇராணுவத்தால் பாலியல் வன்முறை மற்றும் பாலியல் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

எமது விடுதலைப்போராட்டத்தின் முக்கிய அரசியல் நோக்கங்களில் ஒன்று தமிழீழப் பெண்களின் மேம்பாட்டுக்காக உழைப்பதும், அவர்களது நலன்களை மீட்டெடுத்து பாதுகாப்பதும்தான்

இந்த வகையில் தமிழீழப் பெண்களின் எதிர்கால நல்வாழ்விற்காக இந்த இளம் பெண்போராளிகள் தங்களது உயிர்களை அர்ப்பணித்து இவ் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டபடியுள்ளனர், இவர்களுடைய போராட்டப்பங்களிப்பானது ஒரு புதிய - புரட்சிகர மான வடிவத்தை தமிழீழப் பெண் சமூகத்திற்கு வழங்கியுள்ளது.

காலங்காலமாக பெண்கள் தொடர்பாக இருந்து வந்த இழிமைத்தனமான பார்வைகளை - த. வி. போராட்டத்தில் பங்கு கொண்ட தமிழீழ இளம் பெண்களின் இராணுவ அரசியல் செயற்பாடுகள் - மாற்றியமைத்துள்ளன.

இப்புரட்சிகர மாற்றங்களையும் வீரவாலாறுகளையும் ஒரு எழுச்சிக் காவியமாக இவ் இளம் பெண்போராளிகள் படைத்து அதை எதிர்கால சந்ததிக்கு வழங்கியுள்ளார்கள்.

வீரம் செறிந்த-தியாகங்கள் நிறைந்த நாட்டுப்பற்றை வெளிப்படுத்தும் இவ் உண்மைக் கதைகள் எதிர்கால சந்ததிகளாலும் போற்றப்பட்டு அதை தமது வழிகாட்டிகளாகவும் எடுத்துச் செல்வார்கள்.

இவ் வீரகாவியங்கள் தமிழீழ வரலாற்றின் ஏடுகளிலிருந்து மறைந்து போகாது. அது காலங்காலமாகவே இருந்து தமிழ் மக்களின் வரலாற்றை வளம்படுத்திக் கொண்டேயிருக்கும்.

இத்தகைய முன்னுதாரணங்கள் மூலம் தமிழீழ இளம் பெண்கள் உலகம் முழுவதும் வாழும் புரட்சிகரப் பெண்களை எழுச்சியூட்டியுள்ளனர்.

அத்துடன் எல்லா திறமைகளிலும், பெண்கள் ஆண்களுக்கு சளைத்தவர்கள்அல்ல என்ற தன்னம்பிக்கையை உலகிற்கு குறிப்பாக பெண் சமுதாயத்திற்குஊட்டியுள்ளனர்.

இதன் காரணமாக, பெண்கள் தொடர்பாக உலகம் முழுவதும் இருந்துவரும் பிற்போக்குத்தனமான பார்வைகளை களைந்தெறிய தமிழீழ இளம் பெண்போராளிகள்தாம் முன்நின்று பங்களித்துள்ளனர் என்பதை மறைக்க முடியாது.

இவ்விதம் செய்வதன்மூலம் பெண்கள் சமத்துவமாக பார்க்கப்படவேண்டும், அதே போன்று நடாத்தப்பட வேண்டும்என்றபல்லாயிக்கணக்கான உலகப்பெண்களின் அபிலாசைகளை - தவிப்புக்களை நிறைவேற்றுவதற்காக தமிழீழ இளம் பெண்போராளிகள் தங்களது பங்களிப்பை தாரளமாக வழங்கியுள்ளனர்.

இவ்விதம்உலகப் பெண்கள் மத்தியில்தீவிரமாற்றங்களைக் கொண்டுவருவதற்கு இவர்கள் தங்களை முன்னுதாரணமாகக் காட்டியுள்ளனர்.

இன்று, தமிழ் மக்கள் ஒரு போர்நெருக்கடிக்குள்வாழ்ந்தபடி தமது அன்றாட வாழ்க்கையை கொண்டுநடாத்தவே திண்டாடும் ஒரு சூழ்நிலைக்குள் இருந்தாலும் கூடஇந்த போர் யதார்த்தத்திலிருந்து ஒருவரும் தப்பமுடியாது.


எம் கண்முன்னே மக்களின் புதிய வரலாறு படைக்கப்படுகின்றது. இவை இதய ஒலிகளால் செதுக்கப்படும் உன்னத வரிகள்.

இது தமிழீழப் பெண்களால் படைக்கப்படுகின்றது.

இதன் நினைவும் - உணர்வும் தமிழினத்தின் ஒவ்வொரு நெஞ்சத்தையும் பெருமிதத்தில் ஆழ்த்தி நிற்கும் வரலாற்றின் உருவாக்கம் என்பது உறுதிபெறுகின்றது.

# ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

12 - 06 - 1992



## லெப். அர்ச்சுனா (ஆர். பி. ஜி.)

( சதாசிவம் தமிழரசுவரன் )

அர்ச்சுனாவாகியது 28 - 10 - 1983

பிள்ளை : 04 - 04 - 1960 மாவீரன் : 12 - 06 - 1986

சீரான வழிசெல்லும் தமிழர் வரலாறு
சீர்கெட்ட சிங்களவர் வழிசென்று
நேரான வழியில் எழுதிடாது - என்றும்
நெறி கெட்ட முறையில் எழுத வேண்டாம்
ஏராளமாக எழுதலாம் சரித்திரங்கள்
எழுதுவது ஏற்றதாய் இருத்தல் வேண்டும்
பூராயம் அறியாது வரலாறு எழுதாது
புலிகளுக்கும் புரியும் என நினைத்தல் நன்று

கூரான கண்பார்வைக்கு
குருடன் வழிகாட்டுவது போலாகாது
பாராவிற்தானே புலிகளென நினைந்து
பாரதந்தான் இராவணன் வரலாறு எனப்பகராது
தீராத எம் தாகம் தீரவென்றும்
திருந்திய மனத்துடனே வரலாறு எழுதவேண்டும்
ஆராய்ந்தறிந்து எழுதுவதே
ஆவணமாம் தமிழர் உண்மை வரலாறு.

46, அத்தியடி புதுவீதி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

[2647]

## சுற்றுச் சூழல்

என்பன பெருமளவில் அழிக்கப்பட்டு இயற்கைச் சமநிலை குலைந்துள்ளது. அணு ஆயுத சோதனைகள், தொழிற்சாலைகள் போன்றவை காற்றையும் சூழலையும் மாசுபடுத்தும் காரணிகளாக இருக்கின்றன.

கடந்த 20 வருட காலத்தில் மட்டும் உலகிலிருந்து 10 இலட்சம் உயிரினங்கள் அழிந்துபோயுள்ளன. அத்துடன் நாளொன்றுக்கு 40 முதல் 270 வரையிலான பல்வேறு உயிரினங்கள் அழிந்து கொண்டு போகின்றன என ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.

உயிரினங்கள், தாவரங்கள் என்பனவற்றை பாதுகாப்பதற்கான உடன்படிக்கை ஒன்றினை கடந்த மாதம் நைரோபியில் கூடிய 98 நாடுகள் அமைத்துள்ளன இந்த உடன்படிக்கை சூழல் பாதுகாப்பில் முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகிறது

இந்த உயிரியல உடன்படிக்கையில் கையெழுத்திடப் போவதில்லையென அமெரிக்கா திட்டவட்டமாக அறிவித்துள்ளது. உயிரியல் கண்டுபிடிப்பு பொருட்களைச் சந்தைப்படுத்தும் அமெரிக்க கம்பனிகளின் பதிவு உரிமைகளை உத்தேச உடன்படிக்கை தகர்த்துவிடும் என்பதே அதில் அமெரிக்கா கையெழுத்திட மறுப்பதற்கு காரணம் என அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் உதவியாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை வளர்ந்து வரும் நாடுகளில் காடழிப்புகள் பெருமளவில் இடம்பெற்று வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. பெருகிவரும் சனத்தொகைக்கு ஏற்ப குடியிருப்பு வசதி, வேலைவாய்ப்பு, எரிபொருள், உணவு உற்பத்திக்கென இந்த காடழிப்புகள் இடம்பெற்று வருகின்றன.

1972 ஆம் ஆண்டுக்குப் பின்னர் உலகில் 200 மில்லியன் ஹெக்டர் நிலப்பரப்பிலிருந்து மரங்கள் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

காடுகளைப் பாதுகாப்பதற்கான புதிய திட்டமொன்றை நடைமுறைப்படுத்த வருடாந்தம் பத்துக்கோடிடாலர்களுக்கும் அதிகமான நிதியை பங்களிப்புச் செய்ய அமெரிக்கா தயாராக இருக்கிறது. ஆனால் காடுகளைப் பாதுகாப்பதில் காட்டு வளங்களைப் பயன்படுத்துவதில் உள்ள கட்டுப்பாடுகளை இந்தியா, மலேசியா மற்றும் அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் கடுமையாக எதிர்க்கின்றன.

இந்த உடன்படிக்கை ஏற்கப்பட்டால் வளரும் நாடுகளின் நலன்களை இது பெரிதும் பாதிக்கும் என இந்தியா தனது கண்டனத்தில் தெரிவித்துள்ளது. '' இந்தியாவின் காடுகள் ஒரு சமூக மூலவளம், கோடிக்கணக்கான மக்களின் எரிபொருள் தேவையை இந்த காடுகளே பூர்த்தி செய்கின்றன. இந்தியாவின் காடுகள் வர்த்தக நோக்கங்களுக்காக அழிக்கப்படவில்லை. அவை ஏழைகளின் வாழ்விற்கான உயிர் நாடியாகவே திகழ்கின்றன. வடஅமெரிக்கா வருடாந்தம் மரத்தின் மூலம் மூவாயிரம் கோடிடாலர்களைச் சம்பாதிக்கிறது இப்போது அவர்கள் காடுகள்சாசனம் பற்றி பேசுகிறார்கள் '' என இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் உயிரியல் சாசனத்தில் கையெழுத்திட அமெரிக்கா தயாராகவில்லை, காடுகள் சாசனத்தில் கையெழுத்திட உலகில் நான்காவது பெரிய நாடாகிய இந்தியா தயாராகவில்லை. ஆக மொத்தம் காடுகளையோ, உயிரினங்களையோ பாதுகாப்பதில் மனப்பூர்வமான செயற்பாடுகள் இருக்குமா? என்பது பெரும் கேள்விக்குரிய ஒன்றாகும்.

அவ்வாறாயின் மாநாட்டின் முடிவு எவ்வாறு அமையப் போகிறது என்பதும் கேள்விக்குரிய ஒன்றாகவே இருக்கிறது.

# இந்தியா சாதகமான சிங்கள அரசைத் தோற்றுவித்தல் சாத்தியமா?

"இந்தியா பிரேமதாஸா அரசாங்கத்தை நிலைகுலைய வைக்க முயல்கிறது"

"தென்னிலங்கையில் தனக்குச் சாதகமான ஓர் அரசாங்கத்தைத் தோற்றுவிக்க இந்தியா முயல்கிறது"

"தெரிவுக் குழுவைப் பகிஷ்கரிப்பதாக சுதந்திரக்கட்சி எடுத்த முடிவுக்கும் இந்தியாவுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு"

இப்படியான சில அபிப்பிராயங்களும் கருத்துக்களும் கடந்த சில வாரங்களாக இலங்கை--இந்திய அரசியல் அரங்கில் எழுந்துள்ளன.

இப்படியான அபிப்பிராயங்களும் கருத்துக்களும் உண்மையா? பொய்யா? என்பதை ஆராய்வதல்ல இக்கட்டுரையின் நோக்கம். ஆனால் இத்தகைய அபிப்பிராயங்களை வைத்துக்கொண்டு ஒரு கேள்வியை எழுப்பலாம்.

அதாவது கொழும்பில் இந்திய சார்பு அரசாங்கமொன்றை இந்தியாவால் தோற்றுவிக்க முடியுமா? அல்லது இந்திய சார்பு அரசாங்கமொன்று கொழும்பில் அமைய முடியுமா?

"அரசியலில் நிரந்தர நண்பர்களும் இல்லை; நிரந்தர எதிரிகளும் இல்லை" என்றொரு கூற்றுண்டு இதனை அப்படியே நம்புபவர்கள் கொழும்பில் இந்திய சார்பு அரசாங்கம் உருவாகலாம் என நம்பலாம். மேற்படி அரசியற் கூற்று அடிப்படையில் உண்மையே ஆயினும் இலங்கையின் விசேட சூழலைப் பொறுத்த வரையில கொழும்பில் இந்திய சார்பு அரசாங்கமொன்று அமைவது அனேகமாகச் சாத்தியப்படாது.

பிரேமதாஸா அரசாங்கம் இந்திய எதிர்ப்புத் தன்மையுள்ளதாக இருக்கின்றது. எனவே எதிர்க்கட்சிகளைப் பயன்படுத்தி அதனைக் கவிழ்த்து இந்திய சார்பு அரசாங்கமொன்றை தோற்றுவிக்கலாமா என்று ஒருபுறமாக எண்ணலாம். அல்லது எதிர்க்கட்சிகள் மூலம் பிரேமாவுக்கு நெருக்கடிகளைக் கொடுத்தால் பிரேமா இந்தியப் பக்கம் இறங்கிப் போகலாம் என்று ஓர் எதிர்பார்க்கையை மறுபுறமாகக் கொள்ளலாம்.

இவ்விரண்டிலும் ஏதாவது ஒரு எதிர்பார்க்கை இந்தியாவிடம் இருக்குமேயாயின் அதில் இந்தியா எவ்வித வெற்றியையும் அடைய முடியாது என்பதே இலங்கைத் தீவின் அரசியல் வரலாறு புகட்டி நிற்கும் உண்மையாகும்.

எதிர்க்கட்சிகள் பிரேமதாஸா அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குத் திரைமறைவில் இந்தியாவுடன் கூட்டுச் சேரக்கூடும். ஆனால் அவ்வெதிர்க்கட்சிகள் பதவிக்கு வந்தால் இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டையோ. அல்லது பிரேமதாஸா அரசாங்கத்தை விடவும் கூடிய இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டையோதான் எடுக்க முடியும்.

ஜே. ஆர். இராஜதந்திர உள்நோக்கங்களுடன் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்து இந்திய இராணுவம் இலங்கைக்குள் வர அனுமதித்தார். ஆயினும் பின்பு நடந்தது என்ன? ஜே ஆரின் மந்திரி சபைச் சகாக்களும் மற்றும் ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் அதனை எதிர்க்கலாயினர். எதிர்க்கட்சிகள் எதிர்த்தன. ஜே. வி. பீ. ஆயுதம் தாங்கிய எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடலாயிற்று. ஜே. ஆர். நிலைதளரலானார். அவர் தனது அரசியல் வாழ்வை முடிக்க வேண்டியதாயிற்று இவற்றின் தொடர் விளைவாக இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு ஐ. தே. கவிலிருந்து ஜனாதிபதியாக வந்த பிரேமதாஸா கட்டளையிடலானார். இங்கு ஒரே கட்சி இந்தியாவுடன் உடன்பாடும், பின்பு அதே கட்சியே இந்தியாவுடன் அதிகம் முரண்பட்டதையும் அவதானிக்கலாம். எனவே இந்திய சார்புப் போக்கை கொழும்பு அரசாங்கம் எதுவும் எடுப்பது சாத்தியமல்லை.

அடுத்து இரண்டாவது விடயத்தைப் பரிசீலிப்போம். அதாவது எதிர்க்கட்சிகளுக்கூடாக நெருக்கடி கொடுப்பதன் மூலம் பிரேமாவைப் பணிய வைக்கலாமா என்பது இந்திய எதிர்ப்பு தென்னிலங்கை அரசியலில் ஒரு பிரதான அம்சம் என்பதை முதலில் கருத்திற் கொள்ள வேண்டும் காலம் காலமாக இது சிங்கள மக்கள் மத்தியில் ஊட்டி வளர்க்கப்பட்டு வந்துள்ளது. இப் பின்னணியில் பிரேமா பின்வருமாறு நடக்க வாய்ப்புண்டு. இந்தியச் சார்புச் சந்தேகங்களினாலே நெருக்கடிகள் பிரேமாவுக்கு ஓர் எல்லையை மீறி வருமாயின் பிரேமா தீவிர இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுப்பதும், எதிர்க் கட்சிகளை இந்தியாவின் கைக்கூலிகள் என்று குற்றம் சாட்டவும் கூடும் இத்தகைய பிரசாரம் சிங்கள மக்கள் மத்தியில் இலகுவாகச் செல்படியாகக் கூடிய அரசியற் பின்னணி உண்டு இக்கட்டத்தில இந்திய சார்பு நிலைப்பாட்டைக் கொண்டிருந்த எதிர்க்கட்சிகள் கூட மறுவளமாகக் குத்துக்கரணம் அடித்து தம்மையும் இந்திய எதிர்ப்பாளர் என்று காட்டிக் கொள்ளக் கங்கணம் கட்டி நிற்பர். அத்துடன் கொழும்பும், டில்லியும் ஓர் எல்லைக்கப்பால் சுமுகமடைவதை மேற்குலகம் விரும்புமென்றில்லை

1977 ஆம் ஆண்டிற்கு முற்பட்ட காலங்களில் இந்தியா சிங்கள அரசாங்கங்களுக்கு விட்டுக் கொடுப்பான நிலைப்பாட்டையே பொதுவாக எடுத்தது. அதனால் இந்தியா எந்தவிதமான வெற்றியையும் அடையவில்லை 1977 இற்குப் பின் ஜே ஆர் அரசாங்கத்தின் மீது அச்சுறுத்தலான போக்குகளை இந்திரா அரசாங்கம் கைக்கொண்டபோதிலும் ஜே ஆர் மேலும் தீவிரமடைந்தார். பின்பு ஜே ஆருக்கு நெருக்கடி கொடுக்கும் வகையில் தமிழ் இயக்கங்களுக்கு இந்தியா ஆயுதங்களை வழங்கியது. தமிழ்மக்களுக்குச் சாதகமாக இந்தியா நடப்பதுபோல ஒரு தோற்றம் ஏற்பட்டது அதுவும் எதிர்பார்த்த வெற்றிகளைக் கொடுக்கவில்லை. பின்பு இலங்கையுடன் சேர்ந்து ஒப்பந்தம் செய்து நடுவராகத் தோன்றி. பின்பு தமிழருக்கு எதிராக யுத்தமும் செய்து பார்த்தது அதனாலும் இந்தியா எந்த வெற்றியையும் அடையவில்லை என்னும் படுதோல்வியைத் தழுவிக் கொண்டது. இவை எல்லாம் எதனைக் காட்டுகின்றதென்றால் சிங்கள அரசைப் பற்றி இந்தியா ஒருபோதும் சரியாகப் புரிந்து வைத்திருக்கவில்லை என்பதுடன் சிங்கள அரசின் நட்புக்காகத் தமிழரைப் பலியிட இந்தியா தயாராய் இருந்தது என்பதும் தான்

## மு. திருநாவுக்கரசு

இவ்வாறாயின் இந்தியாவின் நடவடிக்கைகள் அது எதிர்பார்த்ததையும் விட எதிர்மாறானதாகவே அமைய முடியும் எனவே தென்னிலங்கை இந்தியாவின் நண்பனாக ஒருபோதும் ஆக முடியாது

இலங்கைத் தீவில் இந்தியாவிற்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு நட்புச் சக்தி தமிழர்தான். தமிழருக்குச் சாதகமாக நடப்பதால் மட்டும்தான் தமிழரின் நட்பைப் பெற முடியுமே தவிர தமிழருடன் போர் புரிவதாலோ, புலிகளைத் தடை செய்வதாலோ அன்றித் தமிழருக்குப் பாதகமாக நடந்து கொள்வதாலோ அல்ல.

அரசியல் ரீதியாக இப்போதுள்ள கேள்வி இதுதான் சிங்கள அரசாங்கங்களின் நட்பை இந்தியா ஒருபோதும் பெற முடியாது அப்படியாயின் தமிழரின் நட்பை? தமிழரின் நட்பைப் பெற வேண்டுமாயின் தமிழரின் போராட்டத்தை ஆதரிப்பது ஒன்றே இந்தியாவிற்கு நன்மை பயக்கும்.

# கோவலன் கூத்து கலையுலக வாழ்விற்கு என்னை ஈர்த்தது

முல்லைத்தீவைச்சேர்ந்த வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் அடிப்படையில் ஒரு கமக்காரர் சிறுவயதிலேயே அண்ணாவி மாணிக்கத்திடம் மரபு வழியான வடமோடி ஆட்ட முறையில் முறையாக பயிற்சி பெற்றவர்.

முதல் முதலில் கோவலன் கூத்தில் சுப்பிரமணியத்தைப் பின் கண்ணகி பாகம் ஏற்கச் செய்தார் அண்ணாவி மாணிக்கம் அப்போது சுப்பிரமணியத்துக்குப் பதினான்கு வயது அன்றுமுதல் கண்ணன் கூத்திலும் போஜராஜனின் மகள் மோகவஞ்சியாகவும், இன்னும் பல கூத்துக்களில் பல வேடங்களை ஏற்றுத் திறம்பட ஆடியிருக்கிறார். சிறிய 'பாட்' பெரிய 'பாட்' என்ற வித்தியாசமில்லாமல் வழங்கப்பட்ட பாட்டை ஏற்றுப் பூரணமாகத் தம்மை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறார் சுப்பிரமணியம். அதிகம் பேசாத இவர், கூத்தில் எப்படிப் பாடி ஆடுவார் என்பதை அறிய ஆவல்.

ஆரம்பத்தில் கோவலன் கூத்தில் பின் கண்ணகி வேடத்தை ஏற்ற போது எவ்வளவு ஆர்வத்துடன் செய்தாரோ, அந்த ஆர்வத்தோடு தானாக்கட்டு விருத்தப்பா பாடிக்காட்டுகிறார். அண்ணாவி சுப்பிரமணியத்துக்கு இப்பொழுது வயது 78 இந்த வயதில் இது எவ்வளவு சிரமசாத்தியமாக இருக்கும் என்று நாம் எண்ணினாலும் இவர் இயல்பாகவே பாடுகிறார்.

'உங்களுக்கு எப்போது முதல் நாட்டுக் கூத்தில் ஆர்வம் உண்டாயிற்று? என்று கேட்டபோது சிறுவனாயிருந்த போது நான் பார்த்த கோவலன் கூத்து கலையுலக வாழ்விற்கு என்னைக் கொண்டு வந்தது. கூத்துக் களரியில் ஆடவேண்டும் என்ற ஆசை எனக்கு ஏற்பட்டது ஒன்பது பத்து வருடங்கள் முறைப்படி வடமோடி ஆட்டம் பழகினேன் என்று பெருமிதத்துடன் நினைவு கூர்கிறார் சுப்பிரமணியம் "இக்காலத்தில் ஒரு மாதம் பயிற்சியில் அரங்கேற்றம். இப்படி ஒரு பயிற்சியா?" என்று வியக்கிறார் சுப்பிரமணியம்.

மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் பதிவு செய்கிறார்.

சுப்பிரமணியத்தின் அண்ணாவி வாழ்க்கை எப்படி ஆரம்பமாயிற்று?

எல்லாமாகப் பதினாறு பொடியன்கள் பழகினோம் அண்ணாவியாரின் சொல்லுக்கும் பணிந்தவன் நான்தான் இனிமேல் என்னாலும் இயலாது என்று வாக்குத்தந்தார் அன்றுமுதல் மிருதங்கம்

> அண்மையில் செ. மெற்றாஸ் மயில் நெறிப்படுத்திய சிலப்பதிகாரம் தந்த கோவலன் என்ற பாரம்பரிய ஆட்ட நாட்டுக் கூத்து யாழ்.நகரில் இருஇடங்களில் மேடையேற்றப்பட்டது. இந்தக்கூத்தின் ஆட்ட அமைப்பை நெறிப்படுத்த முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட அண்ணாவி சுப்பிரமணியம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் வழங்கிய செவ்வியின் சுருக்கம.
>
> செவ்வி கண்டவர்:- மதன்

இவர் ஆரம்ப காலத்தில் ஸ்திரீ வேடத்தில் மிக நன்றாக நடிப்பாராம். கிட்டத்தட்ட அறுபத்தைந்து வருடங்கள் வடமோடிக் கூத்துடன் தனது வாழ்க்கையை இணைத்துக் கொண்டிருக்கும் இவர் நாலடி (இருபக்கமும் திரும்பி முறையே நான்கு முறை குதித்து மிதித்து ஆடுதல் இது வீரக்குரிய ஆட்டம்) குத்துநிலை (நாலடி போட்டுக் குந்தி எழும்புதல்) ஒய்யாரம் (பெண்களுக்குரிய ஆட்டம் ஆகிய சிக்கலான ஆட்டங்களை இந்த வயதில் இப்போதும் ஆடுவேன் என்று ஹோர்மோனியம், ஒருஜோடி தாளம் இவைகளை உபயோகப்படுத்தி வருகிறேன்". என்கிறார் அமைதியாக அன்று முதல் இதுநாள்வரை ஓயாமல் கூத்து என்ற மொழி மூலம் தகவல் பரிமாறிக் கொண்டிருக்கிறார் இவர்.

"பதின்னான்கு வயதில் நடிக்க வந்தேன் இருபத்தைந்து வயதில் அண்ணாவியார் வாக்குத்தந்தார் இப்போது எனக்கு எழுபத்தெட்டு வயதாகிறது. ஊர் உலகத்திற்காக அல்ல தொடர்ந்தும் அண்ணவியார் வேலையைச் செய்ய வேண்டும்" என்று அபார நம்பிக்கையுடன் கூறுகிறார். இவ்வாறு கூறும் போது அவர் முகத்தில் இளமை ஊஞ்சலாடுகிறது.

நவீன நாடகங்கள் மொத்தமாகக் கிராமிய ஆட்ட வடிவங்களை, குறிப்பாகக் கூத்தை அமுக்கி விடுமோ என்ற பயமும் இவரிடமிருக்கிறது. இன்றைய தேவையைப்



வே. சுப்பிரமணியம்

பிரதிபலிக்கும் கூத்துப் பற்றிய இவரது பார்வையும் வித்தியாசமானது.

'கூத்து இலவசமாக இல்லாத போது பார்வையாளர்-கூத்தாடுபவர்கள் உறவு காத்திரமாக இருக்காது' என்று கூறும் அண்ணாவி சுப்பிரமணியம் 'இப்போது கூத்துக்களை மூன்று நான்கு மணித்தியாலம் சுருக்கிக் கொடுக்கிறார்கள். சுருக்கிக் கொடுப்பதனால் விளக்கம் அடிபட்டுப் போகிறது' என்கிறார் அவர். நாட்டுக் கூத்து முழுமையாக ஆடப்படுவதன் மூலமே அது அர்த்தம் பெறுகிறது என்பது அவரது நம்பிக்கை. கிராமங்களில் ஆட்ட வடிவங்கள் விவசாயப் பண்பாட்டினை அடியொற்றி வந்தவை மன்னார் முல்லைத்தீவு, மட்டக்களப்பு கிராமங்களில் விவசாயிகளும். மீனவர்களும் கூத்தை அனுபவித்து மகிழ்ச்சியடையவே ஆடுகிறார்கள். கிராமமே ஒத்திசைவாக இயங்குகிறது இந்தப் பின்னணியில் வரும் அண்ணாவி சுப்பிரமணியம் ஆட்ட வடிவில் புதிய மாற்றங்களையும், 'மீறல்'களையும் எளிதில் ஏற்றுக் கொள்ள திருப்பதில் வியப்பில்லை.

'இப்போதெல்லாம் இராம நாடகம், தரும புத்திர நாடகம், வள்ளி திருமணம், பாண்டவர் வனவாசம், பதினெட்டாம் போர் போன்ற ஆட்டங்களை மக்கள் விரும்புகிறார்களில்லை கோவலன் நாடகம் போன்ற சுருக்கமான அண்ணாவி மரபு நாடகங்களைத்தான் விரும்புகிறார்கள். கூத்துக்களைச் சுருக்கி வடமோடி ஆட்ட மரபில் பழக்கலாம். எப்படியிருந்தாலும் கூத்துப் பட்டறைப் பயிற்சி கொடுத்த பிறகுதான் அண்ணாவி ஒத்திகை பார்ப்பது பொருத்தமானது' என்கிறார்.

பல கூத்துக்கள் மெல்ல மறைந்து போவதாக அங்கலாய்க்கிறார் அண்ணாவி சுப்பிரமணியம். கொப்பியில்லாத கூத்துகள் பல இருக்கின்றன என்கிறார் கோவலன் கூத்துக்கு முன் கோதயத்திரன் நாடகம் ஆடினார்கள் அதன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகள் மீதான தடை; சுவிஸில் கண்டன ஊர்வலம்

(பேர்ண்)

விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்தியா தடை செய்திருப்பதைக் கண்டித்து சுவிஸ்ஸின் தலைநகரான பேர்ண் மாநகரில் வரும் 15 ஆம் திகதி ஊர்வலமொன்று நடைபெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு இந்த ஊர்வலத்தை ஏற்பாடு செய்துள்ளதாகவும்,

பேர்ண் பாராளுமன்றத்திற்கு முன்பாக பிற்பகல் 1 30 மணியளவில் இந்த ஊர்வலம் ஆரம்பமாகும் என்றும், இந்த ஊர்வலம் அங்குள்ள இந்திய தூதரகத்தை சென்றடைந்ததும் தூதரக அதிகாரிகளிடம் ஆட்சேபனை மனு கையளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கண்டன ஊர்வலம் தொடர்பாக கூட்டமைப்பு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. இதில்;

சுயநிர்ணயஉரிமையைவென்றெடுப்பதற்கான போராட்டம் எமது தாயகத்திலே நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் தெற்காசிய பிராந்தியத்தில் அதி முக்கிய சக்தியான இந்தியா தனது வல்லாதிக்க நலன்களைப் பேணுவதற்காக மேற்கொள்ளும் முடிவுகள் இலங்கைத் தமிழர்களின் தேசிய நலன்களுக்கு குந்தகமாகவே அமைகின்றன. இந்த வரிசையில் அண்மையில் இந்திய அரசானது புலிகள் இயக்கத்தை உத்தியோக பூர்வமாக தடைசெய்து மீண்டும் தனது சுயரூபத்தினை அம்பலப்படுத்தியுள்ளது. இந்திய அரசின் இந்த நடவடிக்கையைக் கண்டிப்பது ஒவ்வொரு தமிழ்த் தேசிய முற்போக்கு சக்திகளினதும் கடமையாகும். என்று குறிப்பிட்டுள்ளது.

## உடுகம்பொல மீது நீதிமன்றம் பிடி விறாந்து

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பிரதி பொலிஸ்மா அதிபர் பிரேமதாச உடுகம்பொலவை கைது செய்ய கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பகிரங்க பிடி விறாந்தை விடுத்துள்ளார்.

இவர்மீதான வழக்கு நேற்று முன்தினம் மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவரைக் கைது செய்வதற்கு உத்தரவு இடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

## இந்தியா வெறும் பார்வையாளன் அல்ல

### -இந்தியத் தூதுவர்

[கொழும்பு]

தமிழ் மக்களின் நலனில் இந்தியா அக்கறை கொண்டுள்ளது என்றும் இந்தியா வாழாதிருக்கும் வெறும் பார்வையாளரல்ல என்றும் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஹோட்டல் இன்ர கொண்டினற்றில் நடைபெற்ற றோட்டறி மாநாட்டில் பேசுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

### 3 வேங்கைகள்

விடுதலைப்புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.

வீரச்சாவை அடைந்த வீரவேங்கை இளையவன் (பாலன் கனகசபை குணராசா, பாலைமுனை மண்டூர்மட்டக்களப்பு) வீரவேங்கை அரசப்பன் இம்மானுவேல் தயாளன் புனித மரியாள் வீதி சிலாலை), வீரவேங்கை வழுதி (மெல்மன் விக்கிரசிங்கம் வியோகானந்தராசா அம்பாறை வீதி அக்கரைப்பற்று அம்பாறை) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வலி-வடக்கில்

ரும், டாங்கிகளும் பங்கு பற்றியதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்களை எதிர்த்து காலை 5. 30 மணியிலிருந்து மாலை 6. 40 மணிவரையும் புலிகள் கடும் எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர். இத்தாக்குதலில் 20 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பெரும் எண்ணிக்கையில் படுகாயமடைந்தனர்.

மேலும், புலிகளின் கண்ணிவெடியில் சிக்கிய இராணுவ கவசவாகனம் ஒன்றும் சேதமடைந்தது. நேற்று மாலை சண்டை ஒய்ந்த வேளையில் இராணுவத்தினர் சேந்தான்குளம் சந்தியில் தரித்துள்ளனர்.

### அவசர

களை மேற்கொள்ள பொது நலஸ்தாபனங்களினதும் பொது மக்களினதும் உதவிகள் கோரப்படுகின்றன. உதவி வழங்க விரும்புவோர் தமிழர் புனர்வாழ்வுக் கழக காரியாலயங்கள் 83/2 காங்கேசன்துறை வீதி கொக்குவில், சண்டிலிப்பாய் வீதி அளவெட்டி, மருதனாமடம் சர்வோதயம் பிரதேச அலுவலகங்களில் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

### க.பொ.த

சைப்பிரவேசஅட்டவணைகள் அடுத்த மாதம் 20 ஆம் திகதி முதல் அனுப்பிவைக்கப்படும். என்றும், பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அட்டவணைகள் பாடசாலை தலைவர்களுக்கும், தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கான அட்டவணைகள் அவர்கள் கொடுத்துள்ள விலாசத்திற்கும் அனுப்பிவைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### வைத்தியசாலை

கிரனைட் வீச்சில் காயமடைந்த ஏழுபேரின் விபரம் வருமாறு நிர்மலாதேவி கிருஸ்ணபிள்ளை (44 வயது) சந்தையடி மானிப்பாய், இராசேஸ்வரி இராசேந்திரம் (32 வயது) ஆனந்தா வீதி மானிப்பாய் கந்தையா சிவானந்தம் (49 வயது) வைமன் வீதி நல்லூர், பரஞ்சோதி கேதீஸ்வரன் (7 வயது) மானிப்பாய், அப்பாத்துரை யேசுராசா (38 வயது) இணுவில் வீதி மானிப்பாய், அருணாசலம் யோகேஸ்வரன் (35 வயது) மானிப்பாய், திருமதி சந்திரேஸ்வரி இரட்னசிங்கம் (45 வயது) கச்சேரி கிழக்கு யாழ்ப்பாணம் ஆகியோர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (பா)

### விமானப் படையின்

மாதகலில் அதிகாலைப் பொழுதில் நடாத்தப்பட்ட இரு வெவ்வேறு குண்டு வீச்சுத் தாக்குதலில்வர்த்தக நிலையம் ஒன்றும், சனசமூக நிலையம் ஒன்றும், மூன்று வீடுகளும் பலத்த சேதமடைந்தன.

மாலை 5-30 மணியளவில் மாதகல் பகுதிக்கு விரைந்து வந்த இரு குண்டு வீச்சு விமானங்களும், உலங்கு வானூர்தி ஒன்றும் குண்டுத்தாக்குதல்களை நடத்தின. மாதகல் கடற் கரைப்பகுதி மற்றும் அந்தோனியார் வீதி, தபாற்கந்தோர் சந்தி ஆகிய இடங்களில் பல தடவை குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன உலங்கு வானூர்தியில் இருந்தும் வேட்டுகள் தீர்க்கப்பட்டன.

இத் தாக்குதல்களால் ஒருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார் மூன்று பேர் படுகாயமடைந்தனர் நான்கு வீடுகள்,ஐந்து கடைகள்ஆகியவை பலத்த சேதமடைந்தன இளவாலை, மாரிசன் கூடல், சித்திரமொழி, கருகம்பனை, அளவெட்டி, மயிலங் கூடல், முள்ளானை, விளான், சிறுவிளான் ஆகிய பகுதிகளில் அகோர வான் தாக்குதல்கள் காலை முதல் மாலை வரை நடாத்தப்பட்டன. இத்தாக்குதல்களில் நான்கு பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர் பல பொதுமக்களின் குடியிருப்புக்கள் பலத்த சேதமடைந்தன.

இவற்றைவிட வலிகாமப் பகுதியின் பல்வேறு பகுதிகளிலும் உலங்குவானூர்தி பரவலாக கலிபர்த் தாக்குதல்களை கண்டபடி நடத்தியது அத்துடன்றொக்கற் தாக்குதல்களும் இடையிடையே நடாத்தப்பட்டன.

மாதகல், சேந்தான்குளம், கீரிமலை ஆகிய கடற்பரப்புகளில் தரித்துநின்ற கடற்படையினரது பீரங்கிப் படகுகளில் இருந்து கண்மூடித்தனமான பீரங்கித்தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இத்தாக்குதல்களினாலும் பல பொது மக்களின் குடியிருப்புக்கள் பலத்த சேதமடைந்தன.

(க)(ச)

### இனப்பிரச்சினையில்

இந்தியா தொடர்ந்து தமிழ் மக்களுக்குத்துரோகம் இழைக்கிறது என்பது தெளிவாகப் புரிகிறது விடுதலைப்புலிகளை தனது நாட்டில்இந்தியாதடை செய்ததுஇதன்ஒருஉச்சகட்டம் ஆகும்ராஜீவ்கொலையில்புலிகளின் தலைவர் பிரபாகரனை குற்றவாளியாக்கி நாடுகடத்துமாறு இலங்கை அரசிடம் இந்தியா கேட்டுள்ளமை தமிழ் மக்களுக்கும், விடுதலைப் போராட்டத்திற்கும் எதிரான போர்பிரகடனமாகவேஅமைந்துள்ளது.

### பலியானோர்

இப் படகுகளின் தாக்குதல்களினாலும் நான்கு பேர் பலியானார்கள். பலர் காயமடைந்தனர். பெருந்தொகையான சொத்துக்கள் அழிந்தன. காலை 9.30 மணிக்கு நடாத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்களினால் பரமேஸ்வரி (வயது 60) உடல் சிதறிப் பலியானார். மாலை நான்கு மணியளவில் விளான் பகுதியின் வீதியோரத்தில் மக்கள் மீது மேற்கொண்ட தாக்குதலில் அம்பலவாணர் சிவக்கொழுந்து (75) இரத்தினம் யோகநாதன் (33) ஆறுமுகம் வேவி (36) பெரியாம்பி (31) ஆகியோர் பலியாகியதுடன் செல்வி க. சுதணகுமார் [40] நந்தகுமார் [11] மயிலங்கூடல் பிலிப் (72) இளவாலை, தங்கவேல் (57) இளவாலை, இராஜலட்சுமி 38) அருணா (27) வனஜா [19] பவானி (24) சிறிப்பிரியா [27]கருகம்பனை, செல்வமணி (47) கருகம்பனை ஆகியோர் பலத்த காயமடைந்தனர்.

### சுன்னாகம் மல்லாகத்தில்:

சுன்னாகம், மல்லாகம், தாவடி பகுதிகளில் நடாத்தப்பட்ட கலிபர் மற்றும் றொக்கற் தாக்குதல்களினால் பூதப்பிள்ளை (75) சுன்னாகம், பாலேந்திரன் (18) தாவடி, இராசரத்தினம் (42) தாவடி, மீனாட்சி (80) சுன்னாகம்,சின்னத்துரை 72), இராமச்சந்திரன் (47) சுன்னாகம், ஐரோன் (10) மல்லாகம், ஐரோனி (9) மல்லாகம், ராஜேஸ்வரி (38) மல்லாகம், சுகிதா (10) மல்லாகம், பத்மராணி (33) மல்லாகம், தர்மராஜா (42) சுன்னாகம், பாக்கியம் (55) மல்லாகம், அன்னபூரணம் (48) மல்லாகம் ஆகியோர் படுகாயமடைந்தனர்.

### அளவெட்டி

அளவெட்டியில் நடாத்தப்பட்ட கலிபர் தாக்குதல்களினால் இந்திராணி (43) ராஜேஸ்வரி (53) சுந்தரலிங்கம் (45) பாலகுமார் (38) விமலேஸ்வரி (21) விஜயலக்சுமி (35) ஜீவராணி (32) (தெல்லிப்பழை) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

மேலும் காயமடைந்த சிலரின் விபரங்கள் வருமாறு:

பசுபதி (69) ஆனைக்கோட்டை, ராஜராணி (57) மானிப்பாய் விமலதாஸ் (48) சங்கானை, செல்வம் (18) சிவநந்தகுமார் (11) இளவாலை, ஹென்றி பாலசிங்கம் (27) இளவாலை

## வாகன வரிசை இலக்கம்

## 11. 06. 1992

சோதனை சாவடியில் இறுதியாகப் பதியப்பட்ட வாகன வரிசை இலக்கம் — 4314

சோதனை நிலையத்தைத் தாண்டிச்சென்றஇறுதி வாகன வரிசை இலக்கம் — 3375

இராணுவம் அனுமதித்த இறுதி வாகனவரிசை இலக்கம் — 3340

வட பகுதிக்கு வெளியே சென்றவாகன இலக்கம்:
28-1937, 24-7992 26-4882, 26-1728, 28-1308, 26-5052, 22-6666, 28-3303, 41-9579, 28-4367, 41-9038, 70-8005, 71-2074, 42-2397, 24-9490, 27-5682, 26-9755, 42-6452, 25-4025, 36-3041, 25-6649, 36-8010, 36-8312, 36-6028, 70-7579.

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கம்
24-4745, 41-2659, 28-4354 27-5099, 27-5197, 24-207, 24-4664, 41-9746, 28-2979, 24-5461, 42-849, 25-9215, 25-3654, 71-7332, 27-4888, 26-7286, 27-9772, 25-828, 37-4457, 25-6941, 25-1020, 25-3757, 25-8188, 25-4164, 25-5880, 25-9657, 70-1312, 70-4632.


1ST-IN-COM
G. A. Q. 93

யாழ். பல்கலைக் கழகத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விரிவுரைகள்

ஆரம்பம் 21-06-92
காலை 9.00 மணி

பேராதனை பல்கலைக் கழகத்திற்கான
G. A. Q; B. A
விரிவுரைகள் நடைபெறுகின்றன

விபரங்களுக்கு:
S: அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம். [சி/4512]



தொழிலாளர் கல்விச் சான்றிதழ் நெறி

முதல் அரையாண்டுப் பரீட்சை - 1991

மேற்குறிப்பிட்ட பரீட்சை யூன் மாதம், 27 ஆம், 28 ஆம் திகதிகளிலும், யூலை மாதம் 4 ஆம், 5 ஆம் திகதிகளிலும் நடைபெறும்.

மீள் பரீட்சார்த்திகள் பரீட்சைக் கிளையில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்து தகுந்த கட்டணப் பற்றுச்சீட்டுடன் 19-06-92 க்கு முன்பாக சமர்ப்பிக்கவும்.

பரீட்சை அனுமதி அட்டையை 24-06-92 அன்று பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளவும்.

பதிவாளர்
[சி/4539]


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது